Registered as a News Paper பக்கங்கள் 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 மார்கழி 10 (25-12-1992) வெள்ளிக்கிழமை ஓசை 311

## யுத்தத்தின் 'உண்மைகள்' தொலைக்காட்சி நிகழ்ச்சி

யுத்தத்தின் இருபக்க 'உண்மைகளை' வெளிநாட்ட வரும், மற்றையோரும் அறிந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட இருப்பதாகப் பிரதிச் சபாநாயகர் காமினி பொன்சேகா கூறியுள்ளார். படையினருக்கான அன்பளிப்புப் பொருள்களைக் கையளித்தபோது இடம் பெற்ற வைபவத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் யுத்தத்தின் இருபக்க ''உண்மைகளை''யும் வெளிக்கொணரும்பொருட்டு ஒரு (8-ம் பக். பார்க்க)

### (புலிகளின் வீர சாதனை)

# மணலாற்றில் 40 இராணுவம் பலி

# பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

## 7 போராளிகள் வீரச்சாவு

[மணலாறு]

நேற்றுமாலை 4.45 மணியளவில் மணலாற்றில் விடுதலைப்புலிகள் நடத்தியதுணிகர அதிரடித் தாக்குதலில் 40க்கும் மேற்பட்ட சிங்கள இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். மணலாற்றின் கரையோரப்பகுதியில் கோட்டைக்கேணிக்கும் கொக்குத்தொடுவாய்க்கும் இடையில் ரோந்துசென்ற இராணுவ அணி புலிகளின் திடீர்த்தாக்குதலால் சிதறடிக்கப்பட்டது. இந்த இராணுவ ரோந்து அணியில் 60க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சென்றதாகத் தெரிகிறது.

இந்த வெற்றிகரமான அதிரடித்தாக்குதலில் ஏ.கே. எல்.எம்.ஜி-3 ரி 81-2 ரக துப்பாக்கிகள் 23, பட் மொடல் துப்பாக்கி 3 உட்பட பெருந்தொகையான ரவைகளும் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

இத் தாக்குதலில் 7 போராளிகள் வீரச்சாவு அடைந்தனர். இந்த வீர வேங்கைகளுக்கு புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கிறிஸ்துவின் பிறப்போடு விடுதலை பிறக்கட்டும்

### யாழ். ஆயர் ஆசிச்செய்தி



[யாழ்ப்பாணம்]

கிறிஸ்துவின் பிறப்பு அடிமைத்தளையில் வாழ்ந்த எல்லோருக்கும் விடுதலை வாழ்வின் நம்பிக்கையைத் தரும் பிறப்பாக அமைந்தது. இன்று வடக்குக் கிழக்கில் வாழும் மக்களும் பல்வேறு அடிமைத் தளைகளின் மத்தியில் வாழ்க்கை நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். கிறிஸ்துவின் பிறப்போடு நாம் விடுதலை பெற்ற வாழ்வு வாழ வழி பிறக்க வேண்டும் என்று ஆசிக்கிறோம்

இவ்வாறு யாழ். ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, அவரது நத்தார் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடக்குக் கிழக்கில் மக்கள் காலங்காலமாக வாழ்ந்த இல்லிடங்களையும், பொருள்களையும், தமது அருமை பெருமையானவர்கள் முதலாய் இழந்து வாடுகின்றனர். பொருளாதாரத் தடைகளின் மத்தியில் வேலை வாய்ப்பு இன்றி எதிர்காலத்தைப்பற்றி விரக்தியடைந்து நிற்கின்றனர் வன்செயல்கள் இடையிலும், (8 ஆம் பக்கம் பார்க்க)

## பாடசாலை அதிபர் கடத்தப்பட்டார்

[குருநாகல்]

குருநாகல் மாவட்டத்தில் இருக்கும் தமிழ்ப் பாடசாலை ஒன்றின் அதிபர் ஒருவர் கடந்த பதினேழாம் திகதியன்று இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

குருநாகல் வில்கொட இந்து தமிழ் மகாவித்தியாலய அதிபர் கே. கந்தசாமி [42 வயது] என்பவரே அவரது வீட்டிற்கு இரவு எட்டு முப்பது மணியளவில் வானில்வந்த இனந் தெரி (8 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதல்

வல்வெட்டித்துறை, பொலிகண்டி கடற்பரப்பில் கடந்த புதன்கிழமை அதிகாலை 2 மணியளவில் ரோந்து சென்ற கடற்படையினர் மீனவர்கள் மீது பீரங்கித் தாக்குதலையும் 50 கலிபர் தாக்குதலையும் மேற்கொண்டனர்.

ஒரு மணி நேரம் தொடர்ச்சியாக மேற்கொண்ட தாக்குதலின் போது கடற்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் ஒருவாறு கரையை வந்தடைந்தனர். (யோ)

## கட்சிவேறுபாடுகளை மறந்து பிரச்சினையை தீர்க்குக

– பிரேமதாசா

வடக்கு, கிழக்கு பிரச்சினைக்கு தீர்வுகாண சகல அரசியல் கட்சிகளும் கட்சி வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு உருப்படியான முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா குறிப்பிட்டார்

குருவிட்ட பகுதியில் ஆடை தயாரிப்பு தொழிற்சாலையை திறந்து வைத்து பின் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் குறிப்பிடுகையில்; திருமதி சிறிமாவோ ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டால் என்றுமில்லாத பெரும் பான்மையுடன் தான் தோற்கடிப்பேன் என்றும் தெரிவித்தார்.

## இன்று தபால் விநியோகம்

(வடமராட்சி)

யாழ். குடாவுக்கு 'குமண' கப்பலில் எடுத்துவரப்பட்ட தபால் பொதிகள் யாழ். தபாலக உத்தியோகத்தர்களால் கப்பலில் இருந்து யாழ். தபாலகத்திற்கு நேற்று எடுத்து வரப்பட்டது.

இவை தரம் பிரிக்கப்பட்டு இன்றுமுதல் விநியோகிக்கப் படுமென தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (யோ)

## பரீட்சைமுடிவுகள் அடுத்த வாரம்

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையின் பெறுபேறுகள் அடுத்த வாரத்தில வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெத்தமுல்ல கூறியுள்ளார்

## நத்தார் வாழ்த்துக்கள்

ஈழநாதம் வாசகர்கள், விநியோகஸ்தர்கள், விளம்பரதாரர்கள், அபிமானிகள், பொது மக்கள் அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## சமஷ்டிக்கு எதிராக பிரசாரம்செய்வோம்

### காமினிஜெயசூரிய தெரிவிப்பு

[கொழும்பு]

''சிங்கள பாதுகாப்பு சங்கம் எப்பொழுதும் சமஷ்டிக்கு எதிராகச்செயற்படும். சமஷ்டி வேண்டுமா? வேண்டாமா? என கருத்தறிய சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடாத்த அரசாங்கம் யோசித்து வருகிறது. எனவே சமஷ்டிக்கு எதிராக பிரசாரம் செய்ய நாம்தயாராகஇருக்கிறோம்''.

இவ்வாறு மேற்படி சங்கத்தின் தலைவர் காமினி ஜெயசூரிய நாத்தாண்டிய விகாரையில் பேசும்போது தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்; ''இன்று சிங்கள மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டும். தமிழ் அமைச்சர் தொண்டமான் இந்த நாட்டில் வேறு எந்த அமைச்சரும் செய்யமுடியாததைச் செய்கின்றார். ஒரு தமிழனுக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுப்பது சிங்கள அரசியல்வாதிகளின் பிழையாகும்.

''இன்று இராணுவத்தில் சிறந்த பயிற்சி பெற்றவர்களும் [8 ஆம் பக்கம் பார்க்க]

## படையினருக்கு உதவ பிச்சமல் இயக்கம்

### சுதந்திரக் கட்சி ஏற்பாடு

[கொழும்பு]

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட இராணுவத்தினருக்கு உதவும் நோக்கத்துடன் பிச்சமல் இயக்கம் (மல்லிகைப் பூ) என்ற பெயரிலான இயக்கமொன்றை சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆரம்பித்துள்ளது.

கலவான தொகுதியின்சுதந்திரக் கட்சி அமைப்பாளர் வன்னியாராச்சியிடமிருந்து கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ ஒரு மல்லிகைப் பூவை ரூபா ஐயாயிரம் கொடுத்து வாங்கியதன் மூலம் இவ் இயக்கம் கடந்த பத்தொன்பதாம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் உலக மகா யுத்தத்தில் மரணமடைந்த படைவீரர்களின் குடும்பத்தினருக்கு உதவுவதற்காக இதேபோன்று ''பொப்பிமல்'' (பொப்பி மலர்) விற்பனை இயக்கம் ஒன்று ஆங்கிலேய அரசாங்கத்தால் அறிமுகம் செய்யப்பட்டதும். அதனை எதிர்த்து இடதுசாரித் தலைவர்கள் சூரிய மல் (சூரியகாந்திப் பூ) விற்பனையில் ஈடுபட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

# வரி விளம்பரம்

## டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்களை, றேடியோக்களை திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள் சகல மணிக்கூடு பற்றறிகளும் எம்மிடம் உண்டு DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை:- தென்மராட்சியில், டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் இலங்கை வங்கி அருகாமையில், சாவகச்சேரி. (சி-5588)

## கலண்டர் விற்பனைக்கு

அழகிய முறையில் கலண்டர்கள் பதிப்பித்துப் பெற்றுக் கொள்ள ஸ்ரீலங்கா அச்சகம் (அச்சக வீதி) மலிவு விலையில் கலண்டர்கள் கொள்வனவு செய்வதற்கு ஸ்ரீகாந்தா புத்தகசாலை, 330, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (3800)

## "நீமியா உரம்" பூச்சி, புழு விரட்டி

நீமியா உரத்தை நீரில் ஊற வைத்து வடித்தெடுத்த சாரத்தை நெல் மற்றும் பயிர்களில் விசிறிவரப் பூச்சி புழுக்களின் தாக்கம் இருப்பதில்லை.

அண்ணா கோப்பிக் கடைகளிலும் விற்பனை ஆகின்றது. (சி-5626) -மில்க்வைற்.

## தவறிவிட்டது

688051851V எனும் இலக்கமுடைய நடராசா றஞ்சினி என்பவருடைய அடையாள அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர் அதைகு றஞ்சினி, குழுக்கண்டி லேன், கோப்பாய் தெற்கு, கோப்பாய். என்ற முகவரிக்கோ அல்லது ஈழநாதம் காரியாலயத்திலோ கொடுக்கும் படி பணிவுடன் கேட்கின்றேன். (3856)

## திருக்கணித மாதக் கலண்டர்

தினசரி வடுமுறை தினங்கள், விரதங்கள் விசேட நாட்கள் என்பவற்றினை அறிய திருக்கணித பஞ்சாங்க மாதக் கலண்டரை வாங்குங்கள். விலை ரூபா 50.00 மட்டுமே திருக்கணிதம், சாவகச்சேரி [3369]

## மணமகள் தேவை

யாழிந்து 42, 40வயது தீவக வியாபாரிக்கும் வெளிநாடு செல்லும் எஞ்ஜினியருக்கும் இரண்டாந் தாரமாகவும் 36 வயது எஞ்ஜினியருக்கு நகர எல்லைக்குள் வசிக்கும் மணமகள் தேவை. தாரமிழந்தவரும் பிரிந்து வாழ்பவரும் 29-12-92க்குமுன்னர் கிடைக்க விண்ணப்பிக்கவும். C/o ஈழநாதம். (3242)

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். கல்விக் கோட்டம்

## பொதுச் சபைக் கூட்டம்

காலம்:- 28. 12. 92 திங்கட்கிழமை காலை 10.00 மணி

இடம்:- புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம் (எழிலகம் முன்பாக)

விடயம்:- 1. செயலாளர் ஆண்டறிக்கை தயாரித்தல்
2. புதிய நிர்வாகிகள் தெரிவு

கூட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சகல பொதுச் சபை உறுப்பினர்களும், தவறாது கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

தலைவர்
(சி/5546) யாழ். கல்விக் கோட்டம்

---

## எழுது வினைஞர் போட்டிப் பரீட்சைக்கான பயிற்சி வகுப்புக்கள்

மேற்படி வகுப்புக்கள் ஆரம்பமாகி விட்டன. இப் பரீட்சை ஜனவரி மாதம் நடைபெறவுள்ளதால் தொடர்ந்து 15 நாட்கள் வகுப்புக்கள் நடைபெறும்,

விபரங்களுக்கு:

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம். (சி-5647)

---

## பிறந்த நாள் வாழ்த்து



### ஜசீன் வித்யா

கேதீஸ்வரன் - அமிர்தா தம்பதியரின் அருமைப் புதல்வி ஜசீன் வித்யா தனது முதலாவது பிறந்த தினத்தை 25-12-92 வெள்ளிக்கிழமை பேக்கறி ஒழுங்கை யாழ்ப்பாணத்திலுள்ள தனதில்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, பாட்டா, அம்மம்மா, பெரியப்பா (ஜேர்மனி) அன்ரா, [கொழும்பு], ரஞ்சன் பெரியப்பா, பெரியம்மா, மாமா, சுமதி மாமி மாமா மற்றும் மாமிமார், மாமாமார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் அடைக்கல அன்னை அருள்பெற்று சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றார்கள்.

சண்டிலிப்பாய் (3840) அப்பப்பா குடும்பத்தினர்

---

## 6ம் ஆண்டு நினைவுப்பூக்கள்



அமரர்
### சுப்பிரமணியம் கதிர்காமநாதன்

தாய்மடியில்: 06-05-1946 தமிழ் அடியில் 22-12-1987

திதி: 25-12-1992

பாரத நாட்டுப் பாழ்போன இராணுவத்தால் பூரதமேறித் தமிழ்காத்த புண்ணியனே - வீரமுடன் போராடியீழம் புகழ் பொறிக்கும் புலிவெல்லும் தீராது உம் நாமம் நீடுவாழும் தங்கள் ஆத்ம சாந்திக்கு எம் அஞ்சலிகள்.

பெரியமாவடி, சாவகச்சேரி. அன்பு மனைவி மாலினி மக்கள், உறவினர்கள் (சி-5627)

---

## நினைவு கூருகின்றோம்...

### 1992-12-25

1985 ஆம் ஆண்டு இதே தினத்தில் வீரச்சாவெய்திய -

★ நாகமணி தேவசகாயம் (தம்பிலுவில்)

1986 ஆம் ஆண்டு கோட்டைக் கல்லாறுப் பகுதியில் தேசவிரோதிகளுடனான சமரில் வீரச்சாவெய்திய -

லெப். சசி (பொன்னையா சிறிதரன் - குருமண்வெளி)

1987 ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு முகாமில் வைத்துக் கொலை செய்யப்பட்ட மானிப்பாய், சுதுமலை தெற்கைச் சேர்ந்த இளைஞன்.

1988 ஆம் ஆண்டு ஆரையம்பதிப் பகுதியில் ஈ. பி. ஆர். எல். எவ். தேசவிரோதிகளின் முற்றுகையின்போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

முரளி (பீதாம்பரம் நந்தகுமார் - ஆரையம்பதி - மட்டக்களப்பு)

1990 ஆம் ஆண்டு மயிலவெட்டுவான் பகுதியில் எதிர்பாராத விதமாக ஆற்றில் மூழ்கியதில் எமைப் பிரிந்த -

கொனிற் / கென்றி (பூபாலசிங்கம் தர்மலிங்கம் - வந்தாறுமூலை - மட்டக்களப்பு)

1991 ஆம் ஆண்டு ஆ. க. வெ. நடவடிக்கையின் போது விழுப்புண்ணடைந்திருந்து வீரச்சாவெய்திய -

2-ம் லெப். அசோகா (சிவகுரு இந்திரகுமாரி - புலோலி மேற்கு, பருத்தித்துறை - யாழ்.)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/5639)

---

## O/L, ஆண்டுகள் 9, 10

O/L, ஆண்டுகள் 9, 10க்கான வகுப்புக்கள் நடைபெறுகின்றன

**O/L பிரிவு II ஆரம்பம் 03-01-93**

| | | | |
|---|---|---|---|
| விஞ்ஞானம் | தயாநிதி | கணிதம் | நேசன், கிருபா |
| தமிழ் | பிரதீபன் | ஆங்கிலம் | கிரி |
| சமூகக்கல்வி | கியூபேட் | வர்த்தகம் | ஸ்ரீ |
| சைவசமயம் | கிரிதரன் | மனையியல் | செல்வி விஜிந்தி |

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம் சந்தி - யாழ்ப்பாணம்

(சி-5642)




அருமையான குரல்வளம் - கல்விச்சாலையில் நிகழ்ந்தஅனைத்து இசை நிகழ்வுகளையுமே ஆக்கிரமித்தான். அமோக வரவேற்பு, கவிதை. கட்டுரைஎன ஆளுமை பரந்தது விளையாட்டுத் துறைகளிலுந்தான் மகா சூரன, விளையாட்டுக்களில், மெய்வல்லுநர்போட்டிகளில் பரிசில்களைச் சான்றிதழ்களை அள்ளிக்குவித்தான்.

ஆயினும்-

இவ்வளவு மட்டுமே போது மானதா? மனிதத்துவம்பூரணமெய்தியதன் குறியீடுதானா இல்லை என்ற உண்மையே உறுத்திற்று - சுதந்திரம்! அதுவே முதன்மை என்பதை உணர்ந்து கொண்டான். மோகனகுமார், வாணனாகிய தன் அடித்தளமிது. அவனது தினக்குறிப்பேடு இதையே கோடி காட்டுகிறது.

தினக்குறிப்பேடு-

அஃறிணை வடிவந்தான். ஆனால்' ஒருவரது ஆத்மாவின் உணர்வு வடிவம். அதனாற் பேசவே செய்கிறது - இவ்வழியே இவன் பகர்கிறான்!

"எம் இனம் பெற்ற சுதந்திரம்
பெறுமதி வாய்ந்தது.
அதை எதிரியிடம் விட்டுவிடலாமா?
கூடாது-
எமது இனத்தின் சுதந்திரத்தை
மீண்டும் பெற்றுவிட
இறுதி மூச்சுவரை போராடுவோம்!''

உரும்பராய்-

வீரத்தின் விளை நிலம், உண்மை தான் தாயக விடுதலைக்காய் எத்தனையோ மாவீரர்களையே ஈந்து நிற்கும் மண், இந்த மண்தான் கப்டன் வாணனுக்கும் தாய்மடி அவனது அன்பு, பாசமெல்லாம் அங்கு இழையோடிக் கிடந்தது.

ஆனால்-

வந்து நுழைந்தனர் அழையா விருந்தாளிகள். அவர்தம் அமைதிப் பணியின் சரித்திரச் சான்றுகளாய் விளங்கும் தினங்கள் எத்தனையோ! அவற்றுள் ஒன்று, 21 - 10 - 1987......

கருத்தை மூடிக்கொண்டு தமிழீழத்துட் புகுந்தவர்கள், கண்களை மூடிக் கொண்டு யாழ் போதனா வைத்தியசாலைக்குட் புகுந்தனர். துப்பாக்கிச் சன்னங்கள் தும்பித் தள்ளின, வைத்தியர்கள், தாதிமார்கள் ஊழியர். நோயாளிகள் பார்வையாளர்கள்......... ஏராளமான தமிழுயிர்கள் உறுஞ்சப் பட்டன! அவர்களுள் ஒருவராய்ச் சண்முகலிங்கம் ''அம்புலன்ஸ்'' ஓட்டுநர் - வாணனின் தந்தை.

இந்த அமைதிக்கான அமர்க்களத்துள் இவன் இவனதுதம்பி சிக்கி நின்றனர். தம்பியின் கையிற் காயம் அவசரமாய்க் கட்டுப்போட்டான். அவனை அணைத்தபடி சரிந்து குவியும் சடலங் கட்குட் புகுந்து கொண்டான்.

வேறு வைத்தியர்கள், உயரதிகாரிகள் விரைந்து வந்தனர். எஞ்சியோரை மீட்க முனைந்தனர். இந்த ஆரவாரத்தைக் சாதகமாக்கினான். காயத்தின் வழிக் குருதிப் பெருக்கினாற் சோர்வுற்றிருந்த தம்பியைத் தோளிற் தூக்கினான். சுற்றுமதிலேறிக் குதித்து நல்லூரிற்கு வந்து சேர்ந்தான். அங்கு, தம்பிக்கு மருந்து கட்டிக் கொண்டு தாயாரைச் சென்றடைந்தான்.

தந்தையின் மறைவு - விழிகளைத் துளைத்துச் சென்ற கொடூரக் காட்சி - பிஞ்சு மனத்தை வெகுவாய்த் தைத்துவிட்டது சுதந்திரம் பற்றிய எண்ணங்கள் அவனுட் தூவத் தொடங்கின, போராட்டம் பற்றிய உணர்வு முளைவிடத் தொடங்கின.

அப்போதும்-

பத்தாம் ஆண்டு பயிலும் அப்பாவி மாணவனாய் இருந்த - அவனை அந்நியப்படை ஆக்கினைகள் அலைக்கழித்தன. அடிக்கடி கைது செய்யப்பட்டான், உதைகளுக்கும் உள்ளாக்கப் பட்டான், அம்மா லோகநாயகியாற் தாங்கிக் கொள்ள முடியவில்லை, துணையை இழந்த பறவை தன் குஞ்சுகளையாயினும் காப்பாற்றத் துடித்தது. அதுதாய்மையின் இயல்பே! ஒருவாறு பிள்ளைகளைக் கொழும்பிற்குக் கொண்டு போய்ச் சேர்த்தார் அம்மா. நிம்மதிப் பெருமூச்சு, ஆனால், அன்னை நிலையிலிருந்து அந்நியப்பட்ட நிலை....... கொடுமையானதாய் இருந்தது அவனுக்கு ஏற்றுக்கொள்ளவே மனம் ஒவ்வில்லை, '' என்னை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பு '' என அம்மாவுக்கு ஒரே அரிகண்டம் சண்டைகூடப் போட்டான். அவனைச் சமாதானப்படுத்த அம்மாவுக்குப் படாதபாடு ஒருவாறு தேற்றியாயிற்று.

அவனையறியாவிதத்தில், அவனை வெளிநாட்டிற்கு அனுப்பிவிடுவதற்கான ஏற்பாடுகள்நடந்தன. ஏதோ விதமாய் அறிவந்து விட்டது ஆத்திரமடைந்தான். அந்த விடுதியில் போத்தலொன்று கண்களில் எற்றுப் பட்டது. ஆவேசமாய் எடுத்தான். உடைத்தான், கையிற் பெரிதாய் எல். ரீ. ரீ. ஈ என எழுதினான். குருதி ஆறாய்க் கொட்டியது. ஆனால் மருத்துவரிடம் செல்வதோ ஆபத்து. இது எதிரிகள் சூழ்ந்த அந்நியமண்! அம்மா தன்னால் இயன்ற முதலுதவியளித்தான் குருதிப்பெருக்கு கட்டுப்பட்டது தொடர்ந்தும் கொழும்பில் வைத்திருப்பது நல்லதல்ல, அம்மாவை அச்சம் கௌவியது. தமிழகத்துக்கு அழைத்துச் சென்றார். சிகிச்சை நடந்தது. மெல்லக் காயம் ஆறிற்று. விடாப்பிடியாய் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துவிட்டான்.

போராளிகளுடன் உறவை ஏற்படுத்திக் கொண்டான். ஆதரவாகளனாகச் செயற்படத் தொடங்கினான். இராணுவ நடமாட்டங்களைக் கண்காணித்துத்தகவல்களைக்கொடுத்துவந்தான்.

இவ்வேளை—

இந்திய ஆளும் வர்க்கமானது தமிழீழத்தில் கற்க விரும்பியபாடம்கற்று முடியும்தறுவாயினையும் அடைந்தது. ''சுதந்திரத்தையே உயிர் மூச்சாய் கொண்ட ஒரு நாடு அது சின்னஞ் சிறிசாய் இருப்பினும் - அதன் வீரஞ் செறிந்த எதிர்ப்பின் முன்னே வல்லரசு என்பது வெறும் புல்லே'' என்ற உண்மையினைச் சுமந்தவாறு இந்தியப் படை பின்வாங்கிக் கொண்டது.

இடையே—

தாயகம் மீது தற்காலிகமாய் கவிந்திருந்த வசந்தத்தின் போது, இவனும், இவனது அண்ணனும் இணைந்து கொண்டனர். தமிழீழ விடுதலைப் புலிகளின் முழுநேர உறுப்பினர்களாகத் தம்மை ஆக்கிக் கொண்டனர்.

இருவரும் ஒன்றாகவே பயிற்சியெடுத்தனர். வாணன் உழவு இயந்திர விபத்தொன்றிற் சிக்கிக் கொள்கிறான். ஒருகை உடைந்துவிட்டது. சிகிச்சை சிறிது நாட்கள்தான் ''நீண்டநாள்ஓய்வு என்றால்விடுதலைவீரனுக்குஅது சாவினிற்தான்'' என்று கூறுமாப்போல் துள்ளியெழுந்து வந்தான். மீண்டும் பயிற்சியைத் தொடர்ந்தான்.



## கப்டன் வானன்

பயிற்சி நிறைவெய்தியதும் காவலரண் ஒன்றில் கடமையாற்றினான். இரவு பகலாய் மூடாத இந்த இமைகளில் ஒருவனாய் அவனுங் கடமைபுரிந்தான்.

இவ்விதம் காவலரண்களில் கடமை புரிகிற வேளைகளில் எதிரிப்படையினரின் நிலைகளைச் சென்று கண்காணிப்பான். ஆனால் கத்தி விளிம்பில் நடக்கிற இச்செயலின் ஆபத்து அவனுக்குப் பெரிதாய்ப் பட்டதில்லை - மகிழ்ச்சியைக் கொடுத்தது உற்சாக ஊக்கியாய் இருந்தது.

03 11.1990 அன்று நடாத்தப்பட்ட மாவிட்டபுரம் ஸ்ரீறிலங்காப்படை மினிமுகாம் தாக்குதலுக்கு முன், வேவு பார்க்கும் பணியினை இவன் ஏற்றிருந்தான். மிகச்சாதுரியமாகச் சென்று தகவல்களைத் திரட்டி ஒன்றும் மீதியின்றித் தளபதியிடம் பகர்ந்தான். மேலதிக உறுதிப்பாட்டிற்காக தளபதியினால் அனுப்பப்பட்ட போராளிகளினால் கொண்டுவரப்பட்ட தகவல்களும் இவனுடையதைஒத்து அச்சொட்டாகவே இருந்தது. வேவுக் கடமையிலும் இவன் ஆளுமை மிளிர்ந்தது.

இத்தாக்குதலுக்காக எதிரியின் நிலைகளை நோக்கி இவன் சகபோராளிகள் ஊர்ந்து முன்னேறி நிலையெடுக்கின்றனர். தளபதியின் கட்டளை பிறக்கிறது. எதிர்பாராத் தாக்குதலில் எதிரிப்படையினர் நிலைகுலைந்து போயினர். நிதானிப்பதற்குள்ளாகக் குண்டு பட்டு வீழ்கின்றனர். எறிகணைகள், உலங்கு வானூர்திகள்உக்கிரம் கொண்டு எமது நிலைகளைத் தாக்குகின்றன. குண்டுவீச்சு விமானங்கள் எமது முன்னேற்றத்தைக் தடுக்கப் பகீரதப்பிரயத்தனம் செய்கின்றன. ஆயினும் இவர்கள் எதிரிப்படையின் நிலைகளை அழித்தனர். மினிமுகாமைக் கைப்பற்றினர். எதிரிப்படையினர் தமது ஆயுதங்களை வீசிவிட்டு, காயமுற்றதமது சகாக்களைத்தூக்கிச் சுமந்தவாறு ஓட்டமெடுத்தனர். அவற்றையுங் கைப்பற்றி எமது நிலைகளை நோக்கி மீள்கையில், எங்கிருந்தோ வந்ததோரு குண்டு! இவனது உடலைப்பதம் பார்க்கிறது! குருதியாறு நிலத்தை நனைக்கிறது. -அவனது தினக்குறிப்பு வரிகள் குரலிலேயே நெஞ்சுள் ஒலிக்கிறது!

''தமிழா நீ பிறவி எடுத்தாலும்
நீ பிறந்த மண்ணுக்காக ஒரு துளி
இரத்தத்தைக் கொடுத்துவிட மறந்திடாதே
தமிழா.''

மாவிட்டபுரம் மினி முகாமைத் தகர்த்து வீரசாதனை புரிந்தவர்களில் ஒருவனான இவன் தனது விழுப்புண் ஆறுமுன்னே அடுத்த சமர்க்களத்திற் குதித்தான். 19-12-1990 அன்று கட்டுவனில் சிறிலங்காப் படையினருடனான கடுஞ்சமர் முன்னேற முயல்கின்றனர் எதிரிப் படையினர். தடுத்து நிறுத்துவதில் இவனது துப்பாக்கியும் சுறுசுறுப்பாய்த் துரிதமாய் இயங்கியது.

05-02-1991 அன்று நடந்த தச்சன்காடு மினி முகாம் மீதான தாக்குதலிலும் இவனது பங்கு பணி அளப்பரியது.

சகதோழர்கள் மேல் இவன் காட்டுகிற கரிசனை அபாரம் அவர்களை வழிநடத்துகின்ற ஆற்றலை அவர்களே புகழ்ந்துரைபபார்கள். இராணுவம் முன்னேறி வந்த ஒரு தடவை இவனது குழுவைச் சேர்ந்த ஒருவன் அசட்டையாக எழுந்து நின்று அவதானித்தான். இவன் கண்டிப்பும், அன்பும் கலந்த தொனியிற் சொன்னான் ''எவ்வளவு கஷ்டத்துக்கு மத்தியில் ஒவ்வொரு போராளியையும் அண்ணை உருவாக்கி வைச்சிருக்கிறார். நீ என்னெண்டா சும்மாமண்டையைப் போடுறன் எண்டு எழும்பி நிக்கிறாய்!" இந்தச் சிறு வயதிலேயே தலைமைத்துவத்துக்கு விசுவாசமிக்கவனாக, ஒவ்வொரு போராளியினதும் பெறுமதி உணர்வாகத் தன்னை நிலைநிறுத்தியிருந்தான் பங்குபற்றிய அனைத்துத் தாக்குதலுமே மிக நிதானத்துடனும், திறமையாகவும் செயற்பட்டு தளபதிகளின், பாராட்டுதல்களுக்கும், அன்புக்கும் பாத்திரமாகி விட்டான்.

இவனைச் சார்ந்ததால்எத்துணை பெருமை அம்மாவுக்கு கற்ற கல்விச்சாலைகளிற்கு........

இவனது தாயகத்தின் மீதான தணியாப்பற்று, சுதந்திரத்தின் மீதான தீராக் காதல், உறுதி அம்மாவின் சிந்தனையிலும் சீரிய கருத்துக்களை விதைத்துவிட்டது. தன் பிள்ளைகளுக்கு மட்டுமே அம்மா என்று குறுகி நிற்காது ''எல்லாப் போராளிகளுக்குமே நான் அம்மா''என்றுஎண்ணக்கூடிய உன்னத நிலைக்குத் தாயை உயர்த்தி விட்டான். மருத்துவ மனையிற் சிகிச்சை பெற்று வந்த எல்லாப் போராளிகளுமே அவரை ''அம்மா, அம்மா'' என வாயும் மனமும் நிறைய அழைப்பார்கள். தலையை வருடி, காற்று விசுக்கி பாசத்தால் அவர்களைப் பராமரித்தார். வைத்தியர்களோ, பெற்றோரோ, சகோதரர்களோ சிலநேரம் வரத்தவறிவிட்டாலும், இந்த அம்மா ஒரு பொழுதுமே வரத் தவறியதில்லை.

''மாவீரனின் தாய்'' என்ற நியாயமான திமிர்வு இந்த அம்மாவிடம் நிறைய இருந்தது. வாணன்வள்ளுவன் வாக்கைச் செழுமைபபடுத்தி,

''ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகன்
மாவீரன் எனக் கேட்ட தாய்''

என வளர்த்தெடுத்துவிட்டான்.

கல்விச்சாலைகள்:-

எமது கல்விமான்களை உருவாக்குகின்றதே அன்றிக் கவரிமான்களை உருவாக்குவதில்லை என்பது பெரிய குறை ஆயினும் நற்சிந்தனையால், பகுத்தறிவு கொண்ட தன்மான மறவர்கள் எம் மண்ணில் வாழவே செய்கின்றனர் அவர்கள் விடுதலை வீரர்கள்! இவர்களுள் ஒருவனை தம் மாணவனாய்க் கொண்டதில் பெருமையடைகின்றன கல்விச்சாலைகள் ''ஆம், வாணன் எமது பழைய மாணவன்.'' என இறுமாந்து நிமிர்கின்றன உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலயமும், உரும்பராய் இந்துக் கல்லூரியும்.

24-12-1991 இது மிகச் தன்நலக்காரத் தினமோ? இத்துணை புகழ் பூத்த எம் வாணனைத்தன்னுடன் அழைத்துச் சென்றுவிட்டதே—

பாரிய வெடியோசைகள், வலிகாமம் கிழக்கின் தலையில் வடிகின்றது. அந்தக் காலை இவ்வாறுதான் தொடங்கிற்று! இப்பிரதேசத்து ஈவினைப் பகுதி மண்ணின் இயல்பான செம்மை எம்மவர் குருதியால் மேலும் சிவப்பேறி.. மூவர் விதையாகின்றனர். எதிர்பாரத கந்தக வீச்சில் மாசுற்ற எம் சூழற் காற்று இவர்தம்இறுதி மூச்சால் தூய்மைபெறுகிறது இந்த மூவருள் ஒருவன் தான்......வாணன்!

ஓ.........கேட்கிறது உனது ஆத்மராகம் - அதுதான் உனது தினக்குறிப்பேடு:

''வீரத்திற்கு வித்திட்ட தமிழா
கோழைக்குக் குடை பிடிக்கலாமா
கூடாது எமது இழப்புக்கள்
இழப்பு அல்ல விடுதலை என்னும்
பயிருக்கு இடப்பட்ட உரமே
எமது இலட்சியம் ஓங்குக''

உனது குறிப்பேடு

வெறுங் கையேடல்ல பின்தொடர்ந்து வரும் இளைய வீரர்களுக்காய், தாயக மக்களுக்காய் நீ எழுதி வைத்த மரண சாசனம் அது புனிதம் மிக்கது ஏனெனில் உனது புகழுடலின் சட்டைப் பையிலிருந்து அதை நாம் எடுத்த போது அதுவும் குருதியிற்குளிப்பாட்டப்பட்டிருந்தது.

அதன் உயிர்ப்பும் துடிப்புமிக்க வேதவாக்கியங்களை என் உதடுகள் உச்சரித்துக்கொண்டே இருக்கின்றன.

- துஷ்யந்தன்

## சிறுகதை

# உபதேசம் உனக்கும் தான்

சாவித்திரி
அத்துவிதானந்தன்

ஜெனரேட்டர் இயங்கிக்கொண்டிருக்க, வீட்டினுள்ளும் வெளியிலும் ஒளி வெள்ளம்.

இப்போதெல்லாம் குப்பி விளக்குகள் லாம்புகள் போன்றவையே ஒளிச் சாதனங்களாய் இருப்பதில், திருமணங்கள், விழாக்களில் இப்படி ஜெனரேட்டர் மூலம் பெறப்படுகின்ற தற்காலிக வெளிச்சம் என்பது மக்களைச் சந்தோஷப் பெருங்கடலில் ஆழ்த்துகின்ற ஒரு காரணியாய் அமைந்து விடுகிறது.

''முதலே எல்லாப் பிரச்சினையும் கதைச்சுப் பேசி ஓம் எண்டு போட்டு இப்ப வந்து இப்பிடியொரு குண்டைத் தூக்கிப் போடுறாங்களே. கலியாணம்ஒழுங்குசெய்தபடி விடிய நடக்காட்டில ஊர் என்ன சொல்லும்?''

கனகசுந்தரமும் வேறொருவரும் கதைத்துக் கொண்டிருந்தது சாரதாவின் காதுகளில் அரைகுறையாய் விழுகிறது.

திருமணம் சரிவந்தது முதல் அவள் நெஞ்சில் தேவாமிர்தமாகப் பொழிந்து கொண்டிருந்த இசையில் எங்கோ ஒரு சுருதி பேதம்...

'என்ன இது?'

வெளியே வந்து பார்க்கிறாள்.

எல்லோரும் திகைப்பில் நிற்பது தெரிகிறது.

கனகசுந்தரம் வீட்டிலும் அப்படித்தான்.

விடிந்தால் அவருடைய மகள் சாரதாவுக்குக் கல்யாணம்.

''பாவம்... அந்தப் பிள்ளை இவ்வளவு நாளும் பட்ட துன்பத்துக்குக் கடவுளாய்ப் பார்த்து ஒரு வாழ்க்கை குடுத்திருக்கு''—ஊர்ப் பெரியவர்கள்.

''காசு நிறைய இருக்குத்தானே... லெட்சம் லெட்சமாய்க் குடுத்துக் கனகசுந்தரத்தார் ஒரு மாதிரிப் பெடியனைச் சரிக்கட்டியிருப்பார். இல்லையெண்டா இந்தியன் ஆமி பிடிச்சு மூண்டு மாதங்கள் காம்பிலை வைச்சிருந்திட்டு விட்ட பெட்டையைக் கட்ட ஆர் வரப்போறான்! அயலவர்களில் சிலர்.

கடந்த நாலு வருடங்களாக. ''எவ்வளவு தான் நீங்கள் சீதனம் தாறதாயிருந்தாலும், ஆமியிட்டைப் பிடிபட்டிருந்த உங்களுடைய மகளைக் கலியாணம் கட்ட நான் விரும்பேல்லை...'' என்று முகத்திலடித்தது போலச் சொல்லிவிட்டுப் போன எத்தனையோ ஆண்களின் மனநிலையை எண்ணி எண்ணித் தனக்குள் மாய்ந்து போனவள் சாரதா.

காரண காரியமின்றி இந்திய ராணுவத்தினால் கைது செய்யப்பட்டவர்களில் பலர் திரும்பி வரவேயில்லை. சிலர் மீண்டு வந்தார்கள்.

சாரதா திரும்பி வந்தாள்.

ராணுவத்தால் கைது செய்யப்பட்டு மீண்டு வந்த ஒரு பெண் இந்த சமூகத்தினரால் எப்படிப் பார்க்கப் படுகிறாள் என்பதை அனுபவமாய் உணர்ந்தபோது அவள் இதயம் அடிபட்டுப் போயிற்று.

இப்போது அவளைத் திருமணம் செய்துகொள்ள ஒருவன் சம்மதித்து விட்டான். இதுகூடப் பணத்தை முதன்மைப்படுத்தியஒப்புதல்தானென்றாலும் அவன் ஒப்புக் கொண்டதைப் பெரிய காரியமாய் நினைத்தாள் சாரதா. இந்தப் பிறவியில் மட்டுமல்லாது எந்தப் பிறவியிலுமே அவனையே தான் கணவனாக அடைய வேண்டும் என்று நன்றியோடு நினைத்து நினைத்து மனமுருகிப் போகுமளவுக்கு உள்ளம் நிறைந்து போனாள்.

சந்தோஷ மிகுதியில். அடுத்த நாள் தான் உடுத்திக்கொள்ளப் போகும். சேலையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு கண்ணாடி முன் நின்று ஒரு தரம் அழகு பார்த்துக் கொள்கிறாள்.

வாசலில் வாழைகள் பழக்குலைகளுடன் நிமிர்ந்து நிற்க, தோரணங்கள் அசைந்தாட -

இளவட்டங்கள் பலர் ஓடி ஓடிச் சோடனை வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

நேரம் பன்னிரண்டைத் தாண்டி விட்டது. என்றுமில்லா மனநிறைவுடன் சாரதா படுக்கையில் சாய்கிறாள். ஏதேதோ சிந்தனைகள் தூக்கம் வரவில்லை.

★ ★ ★

"இவ்வளவு ஆயித்தங்கள் செய்திட்டம்... விடிஞ்சால் கலியாணம்... இந்தச் சாமத்திலை வந்து இப்பிடிச் சொல்லிப் போட்டு போறாங்களே .. இவங்களுக்குமனச்சாட்சியில்லையே?'

கனகசுந்தரமும் வேறு சிலரும் அவசரமாய்ப் புறப்பட்டு எங்கோ போகிறார்கள்.

இவளுக்குப் புரிந்து விட்டது.

வழமையான விஷயம் தான்.

ஆனால் சின்ன வித்தியாசம். இவன் கொஞ்சம் பிந்திவிட்டான்.

கல்யாணம் வரைக்கும் வந்து, முகூர்த்தத்துக்கும் ஒரு சில மணி நேரமே பாக்கியுள்ள நேரத்தில்-

தன்னை வெளிப்படுத்தியிருக்கிறான். ஆனால்... ஆனால்... ஏன் இப்படி?

முதலே இவன் மறுத்திருக்கலாமே? ஏன் சம்மதித்தான்?...இப்போ ஏன் மாட்டேன் என்கிறான்?

அதுதான் சாரதாவுக்குப்புரியவில்லை. தூண் ஒன்றில் சாய்ந்தபடி அப்படியே அமர்ந்துவிடுகிறாள்.

இரவு மூன்று மணிக்கு மேல் தூதக்குழு திரும்புகிறது. கனகசுந்தரத்தின் முகத்தில் பழையபடியே சந்தோஷம் அது போலவே மற்றவர்களும்.

''சாரதா...''

''சாரதா''

மகளிடம் வருகிறார்.

''சாரதா எழும்பு பிள்ளை...மாப்பிள்ளை ஓமெண்டிட்டார் ..''

இவள் வெறும் ஜடமாய் எழுந்து நிற்கிறாள்.

எல்லோரும் கனகசுந்தரத்தைச் சூழ்ந்து கொள்கிறார்கள்.

'இன்னும் ரெண்டு லட்சம் கூட்டித்தாறன் எண்டு சொல்லி ஒரு மாதிரிஓமெண்ணப் பண்ணியாச்சு...''

பெற்றவனுக்கும் கட்டிக் கொள்ள இருப்பவனுக்குமிடையில் பேரம் பேசப்படுகின்ற விலைப்பொருளாய் அவள்...

ஏனிந்த நிலை? என்ன குற்றம் செய்தாள் அவள்?

நெஞ்சு வலிக்கிறது சாரதாவுக்கு

காயப்படுத்தப்பட்ட அந்த நெஞ்சின் இரத்தம் கண்களினின்றும் வெளியேறிக் கன்னங்களில் வழிகிறது.

கனகசுந்தரம் மகளையே பார்த்தபடி நிற்கிறார்.

அதுவரை காலமும் அவளுக்குள் இருந்து அவளே இனம் காணாமல் விட்டு விட்ட அவளுக்கு முற்றிலும் புதிய வேகம் ஒன்று அவள் இதயத்தை ஆக்கிரமிக்க வார்த்தைகள் ஆவேசமாய் வெளிப்படுகின்றன.

''இப்பிடிப்பட்ட ஒருத்தனைக் கலியாணம் கட்ட எனக்கு விருப்பமில்லை. கலியாணத்தை நிப்பாட்டுங்கோ...''

யாரையும் லட்சியம் செய்யாமல் திரும்பி நடக்கிறாள் சாரதா அதிர்ந்து போன கனகசுந்தரம் அவள் போன திசையை வெறித்துப் பார்த்தபடி நிற்கிறார்.

★ ★ ★

எழுதி முடித்த பிறகுதான் அவனுடைய ஆவேசம் ஓரளவு தணிகிறது.

'புதிய மாற்றம்' எனத்தலைப்பிட்டு உறையினுள் போட்டுக் கொண்டு புறப்படுகிறான்.

பத்திரிகைக் காரியாலயத்தில் அந்தச் சிறுகதையைக் கொடுத்துவிட்டுத் திரும்பும்போது தான் அன்று முழுவதுக்கும் இரண்டு கோப்பை தேநீருடன் காலம் கழித்ததை வயிறு ஞாபகப்படுத்துகிறது.

எதிரில் தென்பட்ட தேநீர்க்கடையினுள் போகிறான்.

இவன் -

பலருடைய அபிமானத்துக்குமுரிய எழுத்தாளன். இளைஞன் நக்கீரன் - பெயரிலும் குணத்திலும

★ ★ ★

பதினைந்து நாட்கள் கழிந்தன.
ஒரு வெள்ளிக்கிழமை

''இண்டைக்கு வெள்ளி மஞ்சரியிலை நக்கீரன்ரை சிறுகதை வந்திருக்கு வாசிச்சனியே மச்சான்?...நல்லாயிருக்கு...''

''ஓமடாப்பா...பொம்பிளையளை வியாபாரப் பொருளாய் நினைக்கிற வைக்கு நல்லஅடி குடித்திருக்கு...''

''இந்தக் கதையிலை வாறபொம்பிளையைப்போல இண்டைக்கு எத்தினைபொம்பிளையள் பாதிக்கப்பட்டு எங்கடநாட்டிலை இருப்பினம்... அது இப்பிடிஒருகதையாய்வரேக்கைதானே நாங்களும் அதைப்பற்றி யோசிக்கிறம் ..''

''இந்தக்கதை நக்கீரன்ரை கற்பனையெண்டே நினைககிறாய்? அந்தாள் எப்பவுமஉண்மையிலை நடக்கிற விசயங்களைத் தான்ரா கதையாய்எழுதும்...இதுஎங்கையோ நடந்திருக்கு .''

''என்ன நக்கீரன்... உங்கடை கதை வாசிச்சன்... நல்லா எழுதியிருக்கிறீர்கள் உண்மையாய் நடந்த விசயம் போலை இருக்கு ..''

விமர்சனங்கள் பாராட்டுக்கள்...

'சாரதா எடுத்த முடிவு எங்களுக்கும் கூட ஒரு புது வேகத்தை ஏறபடுத்தியிருக்கிறது' - எனப் பெண்களிடமிருந்து பாராட்டுக்கடிதங்கள் நக்கீரனுக்கு வந்து குவிந்தன.

பாராட்டு ..பாராட்டு...பாராட்டு...

அவனுக்குச் சலித்துப் போயிற்று.

மனசின் எங்கோ ஒரு மூலையிலிருந்துகொண்டு இனம்புரியாத உணர்வொன்று இவனைத்தொல்லை செய்ய ஆரம்பித்தது.

நேரில் தரிசித்த இந்த உண்மையைக் கதையாக எழுதியபோது இந்த சமூகத்திடம் எத்தனை ஆவேசங் கொண்டு எழுதினான் அவன்?

எதை எதிர்பார்த்து எழுதினான்?

இந்தப் பாராட்டுக்கள்... இவை மட்டும் தானா?

இல்லை...நிச்சயமாய் இல்லை.

அப்போ - அதற்கும் மேல்?

பெண்களிடையே விழிப்புணர்வு.

அதுவும் சரி ஆனால் ஆனால்...

அதற்கும் அப்பால் அவன் எதிர்பார்த்த ஒன்று நடக்கவில்லை. 'நக்கீரா உன் கதையின் நாயகி சாரதா எங்கே இருக்கிறாள்? நான் அவளுக்கு வாழ்க்கை கொடுக்கிறேன்...என்ன...? அப்படிப் பார்க்கிறாய் சத்தியமாய்!

இப்படி ஒரு இளைஞன் கூட அவனிடம் வந்து சத்தியம் செய்யவில்லையே...

இதுதான் அவனை வாட்டியது. மனமுடைந்து போனான். நாட்கள் போய்க்கொண்டேயிருந்தன. அவன் மனக்குறை தீரவில்லை.

★ ★ ★

ஒரு நாள்.

அவனுக்குள்ளிருந்து ஒரு குரல்.

அவனது ஆத்மாவின் குரல்!

''நக்கீரா... நீ யார் ?''

''ஏன் ..? நான் ஒரு எழுத்தாளன்''

''யாருக்காக எழுதுகிறாய்?''

''சமூகத்துக்காகத்தான்''

''எதை எதிர்பார்த்து எழுதுகிறாய்?''

'சமூகத்தில் புதிய மாற்றங்கள்... புதிய சிந்தனைகளை ..''

''ஓ நல்லது நீ எதிர்பார்ப்பது கிடைக்கிறதா?''

''கிடைப்பதுபோலத் தெரிகிறதே தவிர உண்மையிலகிடைப்பதில்லை'' - அவன் குரல் உடைந்து போகிறது.

''பொறு பொறு .. மனம் தளராதே... நீ யார்?'' இதென்ன திரும்பவும் நீ யார் என்ற கேள்வி?'— அவனுக்கு எரிச்சல் வருகிறது. ஆனாலும் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

''நானா? நானும் இந்த சமூகத்தின் ஒரு அங்கம''

ஓ... உனக்கே தெரிந்திருக்கிறதே அப்போ இந்தப் புதிய மாறறங்கள். புதிய சிந்தனைகள் எல்லாம் உன்னிடம் வந்திருக்க வேண்டுமே?''

''................''

''ஏன் மௌனமாகப் போனாய்? 'நான் ஒரு எழுத்தாளன்' என்று மார் தட்டிக் கொள்கிறாய்... நீ எதிர்பார்க்கும் மாற்றங்கள் உன்னிடத்திலேயே ஏற்படாத போது சமூகம் மாற வேண்டும் என நீஎதிர்பார்ப்பது- வெறும் போலித்தனமில்லையா?''

''...............''

எழுத்தாளன் என்பவன் வெறுமே மற்றவர்களுக்கு உபதேசிப்பவன் மட்டுமல்ல... அவனே முனனோடி, என்ன புரிந்து கொண்டாயா?''

குழப்பம் தீருகிறது. உள்ளே பரவிய ஒளியில் மனம் லேசாகிப்போய்த் தன்னை உணருகிறது.

★ ★ ★

அடுத்து வந்த ஒரு மணிப்பொழுதுக்குள் கனகசுந்தரத்தின் வீட்டு வாசல் கதவைத் திறந்து கொண்டு நக்கீரனுடைய மிதிவண்டி உள்ளே நுழைகிறது,

---

## காலக் கனிவு

படைக்கல வண்டிகள்
பவனி வந்தன
இடியென அதிர்ந்தன
கண்ணி வெடிகள்—
பாழ்பட்டுப்போனதெம்தெருக்கள்-
குண்டு குழிகளாய்த் தெருக்களின்
முதுகில்
யுத்தப் புண்கள்—
வந்து போன
எதிரியின் பாதச் சுவடுகள்
பாழ்பட்டுப் போகட்டும் -
முன்னர் முதன் முதல்
திருநெல்வேலியிற் பலாலி வீதி
பாழ்பட்டதாலன்றோ. பாழுங்
கிணற்றிலிருந்து
ஓரடி மேலெழுந்ததெம் வாழ்க்கை
பாழ்படப் பாழ்பட;
மேலெழ மேலெழ
கண்ணிற் தெரிந்தான் கதிரவன்;
கண்டுகொண்ட தெமை உலகு;
இன்றும் எமது
தெருக்களில் குண்டு குழிகள்
ஆயினும் பகைவனை அல்ல,
எங்கள் வீரர் பதித்த
சுதந்திரச் சுவடுகள்.
கனிந்தது-
பகைவனின் பாசறை தேடி
அழித்திடும்
காலம் எமது காலில் வீழ்ந்தது.
தர்மம் எம்மை தட்டிக்கொடுத்தது
நீதியெம் நிழல்தேடி தஞ்சம்
வந்தது
இன்னும் நடப்போம்!
தொடுவானம் மிகுந்த
தொலைவில் இல்லை!
இலட்சக்கணக்காய்
தமிழ்த்திரள் எழுக!
உலுப்பப்படட்டும் உலகின்முகடு!

- செ. பொ. சிவனேசு

# சமாதானம் வராத ஆண்டு

# ஆனால், புலிகளின் வெற்றி ஆண்டு

**நிலாந்தன்**

ஜனம் பெருத்த நகரி
தனிமையாக உட்கார்ந்திருக்கிறாளே
விதவைக்கு ஒப்பானாளே
அவளுடைய நேசர் எல்லாருக்குள்ளும்
அவளைத் தேற்றுவார் ஒருவரும் இல்லை
அவளுடைய சிநேகிதர் எல்லாரும்
அவளுக்குத் துரோகிகளும் சத்துருக்களுமானார்கள்
அவளுடைய ஜனங்களெல்லாரும்
அப்பந்தேடித் தவிக்கிறார்கள்
தங்கள் உயிர்களைக் காப்பாற்ற
தங்களுடைய இனபமானவைகளை
ஆகாரத்துக்கென்று கொடுத்து விட்டார்கள்...

பழைய ஏற்பாடு, எரேமியாவின் புலம்பல் 1:1,2,11

சமாதானத்தைப் பற்றிய கற்பனைகள்எவையுமற்ற இரவொன்றில் இப்பத்தி எழுதப்படுகிறது.

கிறிஸ்மஸ்நாளில் யுத்தமல்லாத வேறெந்தச் செய்தியையும் வாசகர்களுக்குத் தரமுடியாமற் போனதையிட்டு நான் வருந்துகின்றேன்.

இந்த ஆண்டு யுத்தத்தின் ஆண்டாகவே முடியப்போகிறது.

யாரெல்லாமோ வந்து போனார்கள்... கிறிஸ்துவத் துறவிகள் பிறகு பிக்குகள், இடைக்கிடை குவேக்கஸ்இவற்றோடு ரகசியமானவிதங்களில் பரபரப்பின்றி வந்து போன தூதுவர்கள்...

ஆனால் சமாதானம் மட்டும் வரவேயில்லை.

இனியும் அது வரும் என்று சொல்லக் கூடியதாக நம்பிக்கையூட்டும் சமிக்ஞைகள் எவையும் தென்படவில்லை.

யுத்தம் தீர்வுகள் அற்றதொரு வெள்க்குள் பிரவேசித்து விட்டது.

பல சமயங்களில் யுத்தம் வாழ்க்கையை விடவும் நிச்சயமானது போற் தோன்றுகிறது.

சுமார் ஏழு மைல் நீளக் கிளாலிக் கடலை நட்சத்திரங்களை மட்டும் நம்பிக் கடந்து போகும் ஒவ்வொருவரும் அப்படித்தான் நினைககிறார்கள்.

தீர்வுக்குப் போயிருக்கக் கூடிய மிக முக்கியமான கட்டங்களையெல்லாம் தாண்டி யுத்தம் வந்து விட்டதை அவதானிகள் சுட்டிக்காட்டுகிறார்கள். யுத்தம் தனக்கேயான தர்க்க பூர்வ வளர்ச்சியொன்றை அடைந்து விட்டது என்றும், இனி யார் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் அது தன் வழியிலேயே தொடர்ந்தும் செல்லும் என்றும் மேற்படி அவதானிகள் கூறி வருகிறார்கள். இனிமேல், தீர்வுகளைப் பற்றிய சலிப்பூட்டும் முடிவற்ற விவாதங்களில் ஈடுபடுவதை விடவும் உடனடியான யுத்தமற்ற நிலை (Normalcy) ஒன்றைப் பற்றிச் சிந்திப்பதே யதார்த்தமாயிருக்கும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

ஆனால் தோல்விகளிலிருந்து யுத்த நிறுத்தமொன்றிற்கு வர கொழும்பு தயாராகப் போவதில்லை. சில சமயம் சமாதானத்தை ரகசியமான விதங்களில் சென்றடைய அவர்கள் முயலக் கூடும். ஆனால், தமிழர்கள் சமாதானத்தை ஒரு பொறியாகக் கருதிய காலம் போய் இன்று சிங்களவர்கள் சமாதானத்தை ஒரு சூழ்ச்சிப் பொறியோ என்று சந்தேகிக்கும் நிலை உருவாகி விட்டது. எனவே சமாதானம் எங்கேயோ மறைவில் ரகசியமாகக் கனிந்து கொண்டிருப்பதான வதந்திகளைப் பின்பற்றுவது தமிழர்களைப் பொறுத்த வரை விவேகமானது அல்ல.

சமாதானம் வராத ஆண்டுதான் எனினும் இவ்வாண்டு புலிகளுக்கு ஒருவெற்றிஆண்டுதான். கடந்த ஆண்டு ஆனையிறவிலும் மணலாறுக் காடுகளிலும், சிலாவத்துறை வெளிகளிலும் புலிகள் பெற்ற அநுபவங்கள் ஒரு மரபுப்படை போல தொழிற்படுவதில் அவர்களிற்கிருந்த வரையறைகளை உணர்த்திய அதேசமயம் இருக்கின்ற வளங்களை வைத்துக் கொண்டு ஒரு புதிய தந்திரோபாயத்திற்குச்செல்ல வேண்டிய கட்டாயத்தையும் உணர்த்தின எனலாம். புதிய தந்திரோபாயம் இவ்வாண்டைப் புலிகளின் வெற்றிஆண்டாக்கியுள்ளது. அதோடு தன்னைஸ்திரப்படுத்தும்விதத்தில் ஜனாதிபதி பிரேமதாச இராணுவ உயர்பீடத்தில் அடிக்கடி மேற்கொண்ட மாற்றங்களினாலும், இராணுவம் குழம்பிப்போயுள்ளது. எல்லாமுமாகச்சேர்ந்து இவ்வாண்டில் இது ஒரு வெல்லமுடியாத யுத்தம் என்பதைக் கொழும்பிற்குத் தொடர்ச்சியாக நிருபித்துள்ளன,

உரும்பராய் சிவகுமாரன் சிறைவைக்கப்பட்டிருந்த நாட்களில் தன்னோடிருந்த சக தமிழ்க்கைதிகளிடம் அடிக்கடி கூறுவாராம்; தமிழ்ப்பகுதிகளிற்கு வரும்சிங்களப்பொலிஸ்காரர்களையும், படைவீரர்களையும் வழியனுப்பவரும் அவர்களுடைய இரத்த உருத்துக்களும், மனைவியரும்.புகையிரதநிலையங்களிலும், பஸ் தரிப்புக்களிலும் அவர்களை அழுதழுது வழியனுப்பும் காலம் ஒன்றை நாங்கள் உருவாக்க வேண்டும் என்று. இத் தகவலைப் பின்னாளில்தனது நண்பர்களிடம் கூறியவர் வடகிழக்கின் சர்ச்சைக்குரிய முதலமைச்சர் வரதராஜப் பெருமாள்தான். இன்று சிவகுமாரனின் கனவு நனவாகி வருகிறது. யுத்தம் உயர் தளபதிகளுக்கும் பாதுகாப்பற்றதாக வளர்ந்து விட்டது. விடுமுறையில் செல்லும் துருப்புக்கள் அப்படியே ஓடிப்போய் விடுகிறார்கள். காயமடைந்த நொண்டிப் புலியொன்றை வரைந்து வந்த சிங்களக்காட்டூனிஸ்ற்டுகள் இன்று காயமடைந்து படுக்கையில்கிடக்கும் சிப்பாய்களின் கனவுகளைப் பற்றி வரைய ஆரம்பித்துள்ளார்கள்...என்றாலும் இதன் அர்த்தம் யுத்தம் அதன் இறுதிக் கட்டத்தை அடைந்துவிட்டது என்பதல்ல. அல்லது தமிழர்கள் இறுதி வெற்றியைத் நெருங்கி விட்டார்கள்என்பதுமல்ல.

மெய்யான அர்த்தத்தில் கூறுவதானால் யுத்தம் ஒரு விதத்தில்இறுகிப்போயுள்ளது. இருதரப்பினருமே இறுதி வெற்றியைச் சமீபித்து விட்டதாகக் கூறமுடியாதநிலை. தெரிவுக்குழுவும்இறந்துபோய் விட்டது.நிலைமையைஅடுத்த கட்டத்திற்கு நகர்த்துவதெனில் யுத்தமல்லாத வழிகளில் சிந்திப்பதற்கு சில துறவிகளைத் தவிர வேறு யாருமில்லை. யுத்தத்தின் வழியிலும் கூட புதிய பெரிய தாக்குதல்களைப் பற்றிக் கொழும்புசிந்தித்தாலும், அது இறுதிவெற்றியாகவோ புலிகளை சமாதானத்தின் பால் ஈர்க்கக் கூடியதாகவோஇருக்கப்போவதில்லை புதிய தாக்குதல்கள் நிலைமையை மேலும் இறுகச் செய்யும். சமாதானம் பற்றி மிஞ்சியுள்ள பிரமைகளும் அதோடு உதிர்ந்து போய் விடும்.

புலிகள் ஒரு கெரில்லா இயக்கம் எய்தக்கூடிய உச்சக்கட்ட வளர்ச்சியை அடைந்துவிட்டதை விமர்சகர்கள் ஒப்புக் கொள்கிறார்கள்.ஆனால் ஒரு மரபுப்படையைப்போல தொழிற்படுவதற்கு இந்தவளர்ச்சி மட்டும் போதாது. கடந்த ஆண்டு புலிகள் சந்தித்த மூன்று முக்கிய மரபுப்போரையொத்த போர் முனைகளின்

(7ஆம் பக்கம் பார்க்க)

# இளம் ஓவியர்

## ஜக்குலின்

ஜக்குலினின் ஓவியங்களுக்கு ஆதார சுருதியாக இருபபவை- அன்பு, காதல், பெண்விடுதலை, இந்த மூன்றினையும் தாண்டி இவரது தூரிகைஇன்றைய அனர்த்தங்களை அர்த்த புஷ்டியுடன் மிக அரிதாகத் தொட்டிருக்கிறது இவர் தன்னுடைய ஓவியங்களில் பெரும்பாலும் பெண் வடிவங்களையே ஓவியக் கோலமாய்ப் பயன்படுத்தியுள்ளார். பொதுவில் அவை சிருங்காரத்தையும். அவலச்சுவையையும் வெளிப்படுத்துகின்றன, சிறுவயதிலிருந்தே ஓவியத்தால் ஈர்க்கப்பட்டு ஓவியம் வரைந்து வரும் செல்வி ஜக்குலின் முத்துராஜா (வயது: 26) வேலணைக் கல்விக் கோட்டப் பாடசாலை ஒன்றில் ஆசிரியராகப் பணியாற்றுகிறார். இவர் இளைய தலைமுறை ஓவியர்களுள் ஒரு தனித்துவமான பாணியை உருவாக்கி வருகிறார்.

**சந்திப்பு - மதன்**

எப்போது வரைய ஆரம்பித்தீர்கள்?

★ பள்ளிக்கூடத்தில் படிக்கிற போதே நிறையப் படங்கள் கீறும் பழக்கம் எனக்குண்டு எனக்கு எட்டு வயதாக இருக்கும் போது அவ்வப் போது கீற வேண்டும் என்ற உணர்வு எனக்குள் ஏற்படும் அப்போதெல்லாம் மனித உருவங்களைப் புனைந்து வரைவதுண்டு. மனித உருவங்களை ஆடை ஆபரணம் என்ற அலங்கார அம்சத்துடன் பகட்டான ரூபங்களாகச் சித்தரிப்பது சிறு வயதில் எனக்குக் கைவந்த கலை எனது ஆசிரியையாக விளங்கிய அருட் சகோதரி கொலம்பா ஓவியக் கண்காட்சிக்காக என்னைக்கொண்டு படங்களை வரைந்து என்னை ஊக்குவித்துள்ளார்

நீங்கள் புத்தி பூர்வமாக ஓவியம் வரைய ஆரம்பித்த காலத்தில் எவரையாவது அடியொற்றி வர்ணத்தையும் தூரிகையையும் பயன்படுத்தியதுண்டா? அல்லது மற்றவர்களின் ஓவியங்களால் உங்களுக்குப் பாதிப்பு உள்ளதா?

★ ஆரம்பகாலக்திலிருந்து இன்றுவரை ஓவியங்களைப் பார்கக வேண்டும் என்ற ஆர்வம் எனக்கதிகம் என்னாலியன்ற அளவில் ஓவியர்கள் சிலரின் படங்களைப் பார்த்திருக்கிறேன் பிக்காசோ, மைக்கல் அஞ்சலோ, வான்கோ,அகிர்தா ஷெர்கில் (வங்காளம்) ஆகியோருடைய ஓவியங்கள் என்னைக் கவர்ந்திழுத்திருக்கின்றன. முகலாய மற்றும் ராஜபுத்ர ஓவியங்களில் திளைத்து மகிழ்ந்திருக்கிறேன் ராஜபுத்ர கங்கார மரபு ரூபங்களில் காணப்படும் அர்த்தபாவமுள்ள பக்கவாட்டான முகவெட்டும், சிருங்காரம் சஞ்சரிக்கும் விழிகளும் என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றன. மற்றும்படி தனித்துப் பார்க்கும் அளவில் ஓர் ஓவியரை முன் மாதிரியாகக்கொண்டு நான் வரைய ஆரம்பிக்கவில்லை. ஒருவரை அடியொற்றுவதன் மூலம் தான் ஒருவர் ஓவியராக வரவேண்டும் என்ற நியதியுமில்லை. 'அவர் மாதிரிக் கீற வேண்டும், இவர் மாதிரிக் கீற வேண்டும் 'என்று நான் எண்ணியதுமில்லை.

உங்கள் ஓவியங்களில் நீங்கள் முனைப்பாக வெளிக்கொணரும் உணர்வுகள் எவை

★ ஒரே வகையான கருப்பொருளை எனது எல்லா ஓவியங்களிலும் காண முயலக் கூடாது. எது முதல், எது இரண்டாவது என்பது பற்றி எனக்கு ஒரு நம்பிக்கை இருக்கிறது. பெரும்பாலும் எனது ஓவியங்களில் உயிரோட்டமான அம்சமாக இருப்பது காதலும் அன்பும்தான் இரண்டும் அனைவர்க்கும் பொதுவானவை மற்றும்படி, பெண்ணினத்தின் அவலமும், வேதனைக் குரலும் எமது மரபு ரீதியான ஓவியங்களில் பதியப்படுவதில்லை. எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிராகப் புரையோடிப் போயிருக்கும் சமூகக் கொடுமைகளைச் சித்தரிக்கும் போது பெண்கள் சம்பந்தமான சமூக யதார்த்தத்தை என்னால் முனைப்பாக வெளிக்கொணர முடிகிறது.

ஏதாவது ஓவியம் இப்போது வரைந்து கொண்டிருக்கிறீர்களா?

★ சமூகக் கோலங்களை உள்வாங்கிக் கொள்கிறேன். அது எப்போதோ ஒரு நாள் ஓவியமாகப்பரிணமிக்கிறது. இப்போது சில ஓவியங்களைத்தீட்டிக் கொண்டிருக்கிறேன். இன்றைய சூழலில் குடும்ப வாழ்க்கை. காதல் அன்பு, பெண்களின் அவலம் என்பவற்றைச் சுற்றி ஓவியங்கள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. அவை விரைவில் முழுமை பெறும் என்பது எனது நம்பிக்கை.

நீங்கள் வரைகின்ற ஓவியங்கள் முழுமையானவை என்ற திருப்திஉங்களுக்கு உள்ளதா?

★ கீறு பொருள் இதய பூர்வமான ஈடுபாடாக வெளிப்படும் போது அது முழுமை பெறுகின்றது. தான் கண்டதையும், கேட்டதையும் சுய அனுபவத்தையும்தான் ஓவியமாகத் தீட்டுகிறேன். உதாரணமாக, அண்மைக் கால நினைவுகள்தான் மன உந்தலாக1991இல்சர்வதேச மகளிர் தினத்துக்கான ஓவியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற ஓவியமாக முகிழ்ந்தது. முழுமை என்பது சார்புடையது. முழுமைத் தன்மையை அல்லது எனது வெளிப்பாட்டின் நோக்கத்தை கலாரசிகர்கள் எப்படி அணுகுகிறார்கள் என்பது அவர்களுக்குத்தான் வெளிச்சம். பெண்கள் மீது இழைக்கப்படும் கொடூரத்தையும், வன்முறையையும் நான் எதார்த்தமாக வெளிக்கொணர்வதால் அது சம்பிரதாயப் பார்வைக்குமாறுபட்ட வக்கிரம், விரசம் என்றெல்லாம் கூறுகிறார்கள். உடல் அழகின் கவர்ச்சி மேலோங்கி நிற்பதாக விமர்சிக்கப்படுகிறது. மற்றும்படி, யாரும் சொல்லிக் கீறுவது, முகஸ்துதிக்காக கூறுவது எனக்குத் திருப்தியைத் தருவதில்லை. அதில் முழுமையை எட்ட முடியாது. என் அனுபவத்தில் சுய தேடலின் முயற்சிதான் திருப்தி தருகிறது.





நவீன ஓவியம் பற்றிய உங்கள் கணிப்பு என்ன?

★ ஆரம்பத்தில் நவீன ஓவி

(7 ம் பக்கம் பார்க்க)

## நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்

உலகெங்கும் ஒளிவெள்ளம் சூழ்ந்துள்ள
இந் நாளில்

அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள் மற்றும் நலன்விரும்பிகள்
அனைவருக்கும் எமது

நத்தார் புது வருட வாழ்த்துக்களை
தெரிவிப்பதில் மனமகிழ்ச்சியடைகிறோம்.

மலரும் புத்தாண்டுடன் எமது வாடிக்கையாள
ராக இணையத்துடிக்கும் இதயங்களுக்கும்
எங்கள் வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அழகு நிலா நகை மாடம்

உங்கள் ரசனைக்கேற்ற நகைத் தேவை எதுவானாலும்
தரத்திலும், நம்பிக்கையிலும், நாணயத்திலும்
பெறுவது மட்டுமல்லாது. குறித்த தவணை
யிலும் பெறவேண்டுமானால் நீங்கள்
நாடவேண்டிய ஸ்தாபனம்.

## அழகுநிலா நகை மாடம்

213-D, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-5651)


யாழ்ப்பாணப் பல்
கலைக்கழகப் புறநிலை
ப்படிப்புகள் அலகின்
ஏற்பாட்டில்

புகைப்படக்கலை:

### ஓர் அடிப்படை பயிற்சிநெறி

காலம்:- 30 மணித்தியா லங்கள் 1993 ஜனவரி 16-ம் திகதிஆரம்பம் சனி மாலை, ஞாயிறு காலை, மாலை களில் பல்கலைக்கழகத்தில் பயிற்சி நெறி இடம்பெறும்.

விரிவுரைகள், கலந்துரை யாடல்கள், செய்முறை கள் மூலம் பயிற்சிகள் வழங் கப்படவுள்ளன. ஆர்வமுள் ளோர் புகைப்படக்கலை யில் தங்கள் ஈடுபாட்டைக் குறிப்பிட்டு 1993 ஜனவரி 6-ம் திகதிக்கு முன் விண் ணப்பிக்கவும்.

முகவரி:- இணைப்பாளர்,
புறநிலைப்படிப்புகள்அலகு,
யாழ் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி. [சி/5644]


## MATHS CENTRE
NELLIADY

★ ஆண்டு - 05
புலமைப் பரிசில் வகுப்புக்கள்
ஆரம்பம்: 26.12.92 சனி
A. M. 9.00
(3410)



எங்கள் வாடிக்கையாளர்கள்,

அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த

## நத்தார் புதுவருட வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்கிறோம்.

உங்கள், அழகுசாதனப் பொருள்கள் அனைத்தையும்
பெற்றுக்கொள்ள சிவா பென்சி பலஸ்

## சிவா பென்சி பலஸ்

185, நவீனசந்தை (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

(3841)



அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள், மற்றும் நலன்
விரும்பிகள் அனைவருககும் எமது

உவகை செறிந்த

## நத்தார் - புதுவருட வாழ்த்துக்கள்

தரமான நகைகளை நம்பிக்கையோடு பெற்றுக்
கொள்ள நீங்கள் நாடவேண்டியது
வான்மதி நகைமாடம்

நகையுலகில் மங்காப்புகழ் பரப்பும்

**வான்மதி நகைமாடம்**

171, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5650)




# ஆதிபரன்! திருவருளை! அள்ளித்தர வந்தீரோ?

என்மக்கள் கூக்குரல்கள் எத்திசையும் அலறிவர
ஏனிந்த அவலமென்று? கேட்டறிய வந்தீரோ?
நான்படைத்த பொன்பூமி, நல்லுயிர்கள் விளைவெல்லாம்,
ஏன்கரியாய்ப் போகுதென்று? கதையறிய வந்தீரோ?
பதியழிந்து, நிதியிழந்து, மதியழிந்து தவிப்போர்ன்
விதிவழிக்கு, விடிவுதர, விண்நின்று! வந்தீரோ?
அடக்கி ஒடுககி, ஆருயிரைச் சிறைப்படுத்தி
முடக்கி வைப்பார் மூளைக்கு, ஒளிமகனாய் வந்தீரோ?
சிந்தைகுழப்பிச், சிதறடிக்கும் சீற்றத்தின்
விந்தைத் தளமறிய வித்தகனாய்! வந்தீரோ?
நோய்நொடியில், பாய்தரையில் ஒட்டி ஒடாகிக்
காயும் உடல்களுக்குக், கதியளிக்க வந்தீரோ?
அஞ்சேல் அபயமென்று, அகதிகள் வாசலுக்கு,
மிஞ்சும் துயர்துடைக்கும், மேய்ப்பனாய்! வந்தீரோ?
தொழுகுரல்கள் விழுகுரல்கள் படுகுரலாய் அந்தரிக்கும்
அழுகுரல்கள், கேட்கவரும், ஆண்டவனாய்! வந்தீரோ?
செங்குருதிப் போர்க்களத்தில், அங்கவுடல் அழிவோரின்
தங்கத் திருமகனாய்! தங்கிநிற்க வந்தீரோ?
போரிடிகள் பொறிவிலங்கு, எறிகணைகள் பூட்டிவைத்து
மாரடிக்குப், மற்போரை, முறியடிக்க வந்தீரோ?
சந்திகடல் சாலையெல்லாம், சரிந்துவிழும் நல்லுயிரை,
ஏந்தி உன்பதிக்கு, எடுத்துச்செல்ல, வந்தீரோ?
நீதிநெறி குடிபோன, நிட்டூரம் போயொடுங்க
ஆதிபரன்!! திருவருளை! அள்ளித்தர வந்தீரோ??

(3842) ஞா. அரியமலர், மிருசுவில்.

## 10 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



## ம. கலைச்செல்வி [சுமதி]

புங்குடுதீவு ஒன்பதாம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும், தற்போது முரசுமோட்டையில் வசித்து வருபவர்களான மகாலிங்கம் கமலாதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி கலைச் செல்வி தனது பத்தாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

இவர் சீரும், சிறப்பும் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென பெற்றோரும், மங்களரூபன் (அண்ணன்), சிவரூபன் (அண்ணன்), தமிழ்ச் செல்வி (தங்கை) ஆகியோரும், அன்ரிமார், அத்தைமார், அம்மம்மா, அப்பம்மா, யாழ்ப்பாணம் அத்தைமார், மச்சான்மார், மச்சாளிமார், சாவகச்சேரி பெரியமாமா, குடும்பத்தினர் அனைவரும் முரசுமோட்டை முருகன் அருளால் நலம்பல பெற்று திகழ வாழ்த்துகின்றார்கள்.

(சி-5629) குடும்பத்தினர்

# ஜெயலலிதா அரசும் காங்கிரஸ்-பா.ஜ. மோதலும்

தமிழக அரசியலில் இன்று பெரும் குழப்பம் நிலவுகின்றது. மத்திய அரசால் செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ.தி.மு.க. அரசு 'கலைக்கப்படுமா?' என்ற கேள்வி எழும்பியுள்ளது. அ.தி.மு.க. இந்திரா காங்கிரஸ் கூட்டு ஒட்டுப் போட்டுவிட முடியாத அளவில் விரிவடைந்து விட்டதாக அரசியல் விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர். இதற்கு, தேசிய அரசியல் கட்சியைச் சேர்ந்தசிலர் தமிழக அரசியலில் நேரடியாக தலையை நுழைத்துக் கொண்டமையும், முதலமைச்சர் செல்விஜெயலலிதா தேசிய பிரச்சினைகளில் தலையை நுழைத்துக் கொண்டமையுமே காரணமாகும்.

மத்தியில் உள்ள இந்திரா காங்கிரஸ் அரசாங்கம் மீதும், பிரதமர் நரசிம்மராவ் மீதும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவிற்கு சந்தேகம் எழுவதற்கும், இதன் பலனாக காங்கிரஸைக்கண்டனம் செய்வதற்கும் சுப்பிரமணியம் சுவாமி காரணமென்றால், தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா பாரதீய ஜனதாக் கட்சியுடன் அண்மையில் விருத்தி செய்துவரும் உறவும், பாரதீய ஜனதாக் கட்சயின் பொதுச் செயலாளரும், தற்போதைய தமிழ் நாட்டுப் பொறுப்பாளருமான கோவிந்தார்ச்சாரியாவுடனான தொடர்புமே இவ் இரு கட்சிகளின் தேனிலவும் முடிவுறும் நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றது என்றால் இதில் மிகையில்லை.

இந்திய அரசியல் வானில் ''ஆட்சிக் கவிழ்ப்பு ஸ்பெசலிஸ்ட்'' என வர்ணிக்கப்படும் சுப்பிரமணியம் சுவாமி, ஜெயலலிதாவின் ஆட்சியைக்கவிழ்ப்பேன் என கூறி இவ்வருடத்தின் பிற்பகுதியில் தமிழ்நாட்டில் தனது பாசறையை அமைத்துக் கொண்டதுடன் தமிழகத்தின் அரசியல் நெருக்கடி உருவாகியது. சுப்பிரமணியம் சுவாமியின் வழமையான நடவடிக்கை போலவே ஜெயலலிதாவின் எதிராளிகளைச்சேர்த்துக்கொண்டார். தொடர்ச்சியாக ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்களையும் தெரிவித்தார். தனது பணியிலேயே ஊழல் குற்றச்சாட்டு மனு ஒன்றை ஒக். 20இல் ஆளுனரிடம் சமர்ப்பித்து விசாரணை மேற்கொள்ளப்படவேண்டும் எனத் தெரிவித்தார். சுவாமியின் இந்நடவடிக்கை மத்திய அரசின் ஆசியுடன் இடம்பெறுவதாகவே தமிழக முதல்வர் எண்ணினார், குற்றமும் சாட்டினார்.

ஆனால், மத்திய அரசுக்கும் சுப்பிரமணியம் சுவாமிக்கும் இடையில் தொடர்பில்லை எனவும், அவர் நடத்தும் எதிர்ப்பியக்கம் அவரது கட்சியினதும், தனிப்பட்டதுமான நடவடிக்கையே எனவும் தெரிவித்தது. ஆனால், மத்திய பொலிஸ் படை சுப்பிரமணியம் சுவாமிக்கு வழங்கியுள்ள பாதுகாப்பும், சுவாமி அடிக்கடி மத்திய புலனாய்வுப் பிரிவினருடன் உரையாடிக் கொண்டிருந்ததாகக் கிடைத்த தகவல்களும் தமிழக அரசாங்கத்திற்கு திருப்தியைக் கொடுக்கவில்லை. அச்சத்தையே கொடுத்தது.

மேலும், தமிழக முதலமைச்சருக்கு வழங்கிவந்த கறுப்பு பூனைகளின் பாதுகாப்பை திடீரென மத்திய அரசு விலக்கிக் கொண்டமையும், சுப்பிரமணியம் சுவாமி கொடுத்த மனு இன்னமும் நிராகரிக்கப்படாமல் இருப்பதும் நரசிம்மராவ் அரசாங்கம் மீதும் ஜெயலலிதாவை மேலும் சந்தேகப்படவைத்தது. இந்நிலையில் தான் 1975 - 1976 -ம் ஆண்டுகளில் சர்காரிய கமிசன் நியமிக்கப்பட்டபோது தி.மு.க. ஆட்சியாளருக்கு ஏற்பட்ட நெருக்கடிபோன்று தனக்கு ஒரு தேசிய அளவினதான பலத்தைத் தேடிக்கொள்ள ஜெயலலிதா முடிவு செய்ததாக கருதப்படுகின்றது.

இதேவேளை, பாரதீய ஜனதாக்கட்சியும் தமிழகத்தில் தனது கிளைகளைப் பரப்பி வேரூன்ற முற்பட்டுக் கொண்டிருந்தது. திராவிடக்கழகங்கள் இதுவரையில் தமிழகத்தில் நடத்திய பகுத்தறிவுப் போராட்டங்கள் தமிழக மக்களின் கடவுள் நம்பிக்கையைக் குறைக்காவிட்டாலும் மதவெறியைத் தணித்திருந்தது. இந்நிலையில் பாரதீய ஜனதாக்கட்சி தமிழகத்தில் வேரூன்றுவதற்கு தமிழகத்தில் பலமான ஒரு கட்சியின் நட்பு அவசியமானதெனக் கருதியது.

இச்சந்தர்ப்பத்தில் பாரதீய ஜனதாக்கட்சியின் 'இராஜதந்திரத் தொழிற்சாலை' எனவர்ணிக்கப்படும் கோவிந்தாச்சார்யா எனப்படும் கோவிந்தாச்சாரி தமிழ் நாட்டின் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டார். வட இந்தியப் பத்திரிகையில் சுப்பிரமணியம் சுவாமிக்கு சவாலாக அடிக்கடி இடம்பிடித்துக் கொள்ளும் 'கோவிந்தார்ச்சாரியாவுக்கும் திட்டங்கள் எதுவும் தோல்வி அடைவதில்லை' என டில்லி வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் பாரதிய ஜனதாக் கட்சிக்கும்; செலவி ஜெயலலிதாவிற்கும் இடையில் நட்புறவு வளர்ந்தது. இந்தநட்பானது இதுவரை ஜெயலலிதா கூறிவந்த திராவிட இயக்கங்களின் பரிணமவளர்ச்சி' இதுதானா என்று கேள்வி எழுப்பும் கட்டத்தை அடைந்தது. இதனால் அ.தி.மு.க. காங்கிரஸ் உறவு மேலும் விரிசல் கண்டது. நவம்பர் மாதம் 24 ஆம் திகதி தேசிய ஒருமைப்பாட்டு கூட்டம் டில்லியில் நடந்த போது இவ் விரிசல் வெளிப்படையாகவே தெரிந்தது. இக் கூட்டத்திற்கு காவி நிறத்திலான உடையணிந்து சென்ற ஜெயலலிதா பேசிய கருத்துக்கள் இந்திரா காங்கிரஸ் அரசை அதிரச் செய்தன.

இப்பேச்சுக் குறித்து எழுதிய ஓர் தி.மு.க ஏட்டின் ஆசிரியத் தலையங்கம் இப்பேச்சானது முன்னரே பாரதீய ஜனதாக் கட்சியின் செயலாவர் கோவிந்தார்ச்சாரியாவினால் தயாரிக்கப்பட்டது எனத் தெரிவித்திருந்தது. அதேவேளை, தேசிய ஒருமைப்பாட்டு கூட்டத்திற்கு முதன் நாள் பிரதமர் நரசிம்மராவைச் சந்தித்த ஜெயலலிதா உரையாடுவதற்கு 15 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டதாகவும் அதுவும் தமிழகத்தில் ஏற்பட்ட வெள்ள நிவாரணம் தொடர்பாக மட்டுமே பேசப்பட்டதாகவும் அறிய வருகிறது. தமிழக அரசியல் நிலைபற்றியும் சுப்பிரமணியம் சுவாமியின் நடவடிக்கையை பற்றியும் பிரதமருடன் பேசவிருந்த ஜெயலலிதாவிற்கு இதுபெரும் ஏமாற்றத்தைக் கொடுத்தது இந்நிலையில் முன்னரேஅயோத்தியில் ராமர் கோவில் அமைப்பதற்கு ஆதரவான அறிக்கை தயாரித்துக் கொண்டு சென்றிருந்த ஜெயலலிதா மேலும் ஒரு பகுதியை சேர்த்து நீதிமன்றத்தில் வைத்து உத்தரபிரதேச அரசை மத்திய அரசு மிரட்டக் கூடாது எனவும் மத்திய அரசைக் கண்டித்தார்.

இதைத் தொடர்ந்து பாரதீய ஜனதாவால் ஜெயலலிதாவிற்கு கிடைத்த பாராட்டு, டில்லியில் பத்திரிகையாளருக்கு மதிய உணவளித்து நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் ராவ் அரசு மீது விடுத்த கண்டனங்கள், அரசின் பொருளாதாரக் கொள்கையைக் கண்டித்து எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து செய்த வெளிநடப்பு என்பவையும் விரிசலை மேலும் அதிகரித்தது.

இந்நிலையில் நரசிம்மராவ் நிலைமையைச் சீர்செய்வதற்காக அமைச்சர்களை அனுப்பியதோடு அ.தி.மு.க. அரசு கலைக்கப்படாது என்பதை வலியுறுத்த முற்பட்டாராயினும் விரிசலை தவிர்க்க முடியாத நிலையே உருவாகியுள்ளது.


அ.தி.மு.க-காங்கிரஸ் உறவு தொடர்ந்து பேணப்படும் என மத்திய அமைச்சர்கள் காங்கிரஸ் பொதுச் செயலாளர் உறுதி அளித்தபோதும் ஜெயலலிதா அதை நம்பத் தயாராகவில்லை. பிரதமர் நரசிம்மராவ் நேரடியாக உறுதிமொழி அளிக்க வேண்டும் என்ற கருதினார். இறுதியாக நரசிம்மராவ் சென்னை வந்த போது ''எனக்கென்று சில அரசியல் நெறிமுறைகள் உண்டு. கூட்டணிகளையும்கட்சிகளையும் மதிப்பவன் நான், என் தோழமை கட்சிகள் இல்லாதவைகளையும் மதிக்கின்றேன்'' எனக்கூறி நம்பிக்கை ஊட்டமுற்பட்டார்.

ஆனால், ராவ் இவ் உறுதிமொழிகளை அயோத்தியில் பாரதிய ஜனதாக்கட்சி மீதும், அதன் தோழமை அமைப்புக்கள் மீதும் நடந்து கொண்ட முறை செல்லாக்காசுகள் ஆக்கியுள்ளன என்றே கூறவேண்டும். இதேவேளை, தமிழகத்தில் சட்டம் ஒழுங்குசீர்கெட்டு விட்டதாகவும் இந்தியாவில் தடைசெய்யப்பட்ட இந்துமத அடிப்படைவாத அமைப்பு தலைவர்களுக்கு ஜெயலலிதா அரசு அடைக்கலம் அளித்துள்ளதாக வந்ததகவல்களும்திருச்சிராப்பள்ளிக்கு இராணுவ அணிகள் அனுப்பப்பட்டமையும் மீண்டும் தமிழக அரசியலில் குட்டையைக் குழப்பியுள்ளது

ஆனாலும் அயோத்திவிவகாரம் தொடர்பாய் இன்று ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக அ.தி.மு.க. அரசில் மத்திய அரசு கைவைக்குமா என்பது சந்தேகமானதே. ஆனால், இந்நிலை என்றும் இவ்வாறே இருக்கும் என்று கூறிவிட முடியாது. நரசிம்மராவின் ஆசியுடன் செயற்படும் சுப்பிரமணியம் சுவாமியும் அத்வானியின் நம்பிக்கைக்குரியவரென கூறப்படும் கோவிந்தார்ச்சாரியாவும் தமது அரசியல் சித்துவிளையாட்டைக் காட்டாமல் இருக்கப் போவதில்லை,

சுப்பிரமணியம் சுவாமியும் கோவிந்தார்சாரியாவும் தமிழர்கள் ஆயினும் வடக்கில் அவர்கள் வளர்ந்த போது பெரும் அரசியல் சர்ச்சைகளைத் தோற்றுவித்தவர்கள். இவர்களின் தமிழ் நாட்டுப் பிரவேசமும், அரசியல் விளையாட்டுக்களும் காங்கிரஸ், பாரதீயஜனதா ஆகியவற்றின் தேசிய ரீதியான அரசியல் இழுபறிக்குள் தமிழகத்தையும் இட்டுச் சென்றுள்ளது. தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவும் தெரிந்தோ அன்றி தெரியாமலோ அதனுள் இழுத்துச் செல்லப்பட்டுள்ளார்.

- ஜெயராஜ்



## இளம் ஓவியர்

யத்தில் எனக்கு அதிக ஈடுபாடு இருக்கவில்லை. அதற்கு ஒரு பயன்பாடு உண்டு. என்பதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை அதன் காரணமாக நவீன ஓவியங்கள் (Modern Art) தீட்டுவதிலிருந்து நான் விலகிக் கொண்டேன். தத்ரூப வகை ஓவியங்களில் எனக்கு அதிக நாட்டம் இருந்தது. தத்ரூப பாணியிலேயே எனது ஓவியங்களும் அமைந்தன. மார்க் மாஸ்டரிடம் பயிற்சி பெற்ற காலத்தில் நவீன ஓவியங்கள் பற்றிய அவருடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடிந்தது, பிரயாசைப்பட்டு நவீன ஓவியத்தில் எனது தூரிகையை நனைத்தேன் நவீன ஓவியபணியில் நான் எதிர்பார்க்கிற அளவிற்கு என் கருத்தைக் கலப்பது சாத்தியமாகிறது கருத்துக்கேற்றவாறு வர்ணங்களைச் சேர்க்க முடியும் என்னைப் பொறுத்த வரையில் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் என்ற அளவில் நவீன ஓவியம் நல்லதொரு ஊடகமாகவும் பயன்படுகிறது. தத்ரூப ஓவியமும் நவீன ஓவியமும் இணையும் இடத்தில் புதிய கற்பனைகள் சாத்தியமாகின்றன.

ஓவியக் கலையைப் பொறுத்த வரையில் உங்கள் இலட்சியம் என்ன?

★ சிறு வயது முதல் வரைகிறேன். ஆனால் ஓவியத்தைப் பொறுத்தவரை இலட்சியம் என்று ஒன்றும் எனக்குக் கிடையாது. நினைவுகளில் சஞ்சரிக்கிறேன். நினைவுகள் நீறு பூத்த நெருப்பைப் போல. சில சமயங்களில் அவை எரியத் தொடங்குகின்றன அப்போதெல்லாம் 'விதியின் கை' வரைகிறது அவ்வளவு தான்!

ஓவியத்தையும் சமகாலப் பிரச்சினைகளையும் (அது எதுவாக இருந்தாலும்) சம்பந்தப் படுத்தும் பார்வை எமது ஓவியர்களுக்குக் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

★ எமது அனுபவங்களையும் அவலங்களையும் வெளிக்கொணர்வதுதான் ஓவியம் இது எல்லாக் கலைகளுக்கும் பொருந்தும். சாஸ்திர வரம்பிற்குள்ளேயே நிற்கும் மனநிலையில் உள்ளவர்களிடம் அனுபவமும், சமகாலப் பிரச்சினைகளும் ஓவியமாகப் பரிணமிக்க வழியில்லை. இன்னும் சிலர் தாமே அமைத்துக் கொண்ட வரம்பிற்குள் தனிப்பட்ட விரும்புகளில் அதிக அக்கறை காட்டுவதால் சந்தர்ப்பவசமாகிப்

போன தனிப்பட்ட நடைமுறைகளைத்தான் உருவகப்படுத்திச் சித்திரிக்கிறார்கள். வரம்பை மீறுவது இவர்களுக்கு முடியாத காரியம் பிரச்சினைகளின் வடிவமும் இவர்களைப் பாதிப்பதில்லை.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானம்

போதும் அவர்கள் தொகையான வீரர்களை இழக்கநேர்ந்தது. ஆனால் இவ்வாண்டை அவர்களின் வெற்றி ஆண்டாக்கியவை கெரில்லாப் போர் முனையில் அவர்கள் தொடர்ச்சியாகப்பெற்ற வெற்றிகள் தான். இதிலிருந்து ஒரு முடிவுக்கு வரலாம். கெரில்லாப் போர் உத்திகளிலிருந்து மரபுப்போர் உத்திகளை நோக்கி யுத்தத்தை நகர்த்துவதன் மூலம்தான் புலிகள் அடுத்த கட்ட வளர்ச்சிக்குப் பாயமுடியும்.

யுத்தத்திலும் சமாதானத்திலும்வரையறைகள் உருவாகிவிட்டன. இத்தகைய இறுக்க நிலை நீடிப்பது வெளிச்சக்திகளின் தலையீட்டிற்கு வழிவகுக்கும் என்ற தொனிப்பட ஜனாதிபதியின் ஆலோசகர் தயான் ஜெயதிலக போன்றவர்கள் எழுதத்தொடங்கியுள்ளார்கள். இருதரப்பினரையும் பேச்சுவார்த்தைகளிற்குப் போகும்படி மேற்கு நாடுகள் ஆலோசனை கூறிவருவதாக தயான் எழுதுகிறார். யுத்தமற்ற நிலைமையொன்றை உருவாக்கக் கொழும்பு தயக்கத்துடன் முயல்வது போற் தெரிகிறது. பிரகடனம் செய்யப்படாத யுத்தநிறுத்தம் ஒன்றிலிருந்து பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு அவர்கள் விரும்புவதாகக் கூறப்படுகிறது. குவேக்கஸ் காவிவந்த செய்தியும் கிட்டத்தட்ட இதையொத்தது என்றே கூறப்படுகிறது. வழமைபோல, மக்கள் வதந்திகளால் அலைக்கழிக்கப்படுகிறார்கள். துறவிகளும், அரசியல் வாதிகளும் மற்றும் சர்வதேச நிறுவனங்களும் முயன்று முடியாமற்போன யுத்த நிறுத்தம் குறைந்தபட்சம் நல்லநாட்கள் பெருநாட்களை முன்னிட்டாவது தோன்றக்கூடுமோ? என்ற காத்திருப்பைப் பரவலாகக் காணமுடிகிறது. சில சமயங்களில் நாட்களின் வலிமையாலோ அல்லது வேறெந்தக் காரணங்களினாலுமோ யுத்தம்தற்காலிகமாகத் தணியக் கூடும். நிச்சயமாக தமிழர்கள் இதை சமாதானம் என்ற அகன்றஅர்த்தத்தில்புரிந்துகொள்ளத்தேவையில்லை. யுத்தம் தொடர்ந்தும் அதன் இரக்கமற்ற வழியிலேயேசெல்லப்போகிறது. சிங்களவர்கள், அவர்களைப் பீடித்த மகாவம்சப் பொய்களிலிருந்து விடுபடாதவரை.

# தமிழக நல்லாட்சி இயக்கம் வலுவடைந்து வருகிறது

[சென்னை]

செல்வி ஜெயலலிதாவை பதவி நீக்கம் செய்விக்க ஆரம்பித்த தமிழக நல்லாட்சி இயக்கம் இப்போது வலுப்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனக்குத் தெரியாமல் இராணுவத்தைத் தமிழ் நாட்டுக்கு அனுப்பியது தவறு என்று ஜெயலலிதா டில்லிக்குத் தெரிவித்துள்ளார். தேவை இன்றி இராணுவத்தை அனுப்பியது தனது ஆட்சி கலைக்கப்படும் என்ற வதந்திக்கு வழிவகுத்துள்ளது என்று அவர் பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தமிழ் நாட்டுக்கு இராணுவம் அனுப்பப்பட்டதற்கும் தமிழக அரசியல் விவகாரங்களுக்கும் எந்த விதத் தொடர்பும் இல்லை என்று பிரதமர் கூறிய பின்னும் ஜெயலலிதா சமாதானம் அடையவில்லை.

பிரதமர் பி. வி. நரசிம்மராவ், தமிழக நல்லாட்சி இயக்கத்தின் அமைப்பாளரான டாக்டர் சுப்பிரமணியம் சுவாமியைக் கட்டுப்படுத்தாவிட்டால் அவர் காங்கிரஸ் நாடாளுமன்றத்தின் தலைமைப் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று ஜெயலலிதாவின் அமைச்சர்களான இந்திரா குமாரியும், மதுசூதனும் பேசியுள்ளார்கள்.

## உண்மையை நீண்ட காலம் மறைக்க முடியாது

-கருணாநிதி

(சென்னை)

ராஜீவ்காந்தியின் கொலைக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் இருந்த குறைதான் காரணம் என்று வர்மா ஆணைக்குழு கூறியிருப்பது நீண்ட காலத்திற்கு உண்மையை மறைக்க முடியாது என்பதைக் காட்டுகிறது.

இவ்வாறு திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு கருணாநிதி அறிக்கை ஒன்றில் கூறியிருக்கிறார்.

## தெருவிளக்குகள் திருட்டு தடுக்க கோரிக்கை

[மானிப்பாய்]

பலரின் நன்மைகருதி முக்கிய சந்திகளில் போடப்பட்டு வரும் வீதிவெளிச்ச விளக்குகள் சில புல்லுருவிகளால் களவாடப்பட்டுள்ளது. இதுபற்றி கருத்து வெளியிட்ட யாழ். மாநகரசபை பொறியியலாளர் நவரத்தினராசா கூறுகையில்: யாழ்நகரில் இரவு வேளைகளில் அதிகரித்த போக்குவரத்து நெரிசல்களில் ஏற்பட்டுவரும் இடர்பாடுகளை தவிர்த்துக் கொள்வதற்காக ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தை சில விஷமிகளின் தொல்லைகள் பாதித்துள்ளது. இதுவரை 07 விளக்குகள் களவு போயுள்ளன, ஒரு விளக்கை செய்து மின்கம்பத்தில் பொழுவுவதற்கு 1000/- ரூபா செலவு ஏற்படுகின்றது எனவே இவ்வாறான இடர்பாடுகளை எதிர்கொள்வதற்கு பொது மக்கள் தங்களுடன் சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென அவர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

## ‘விடுதலைப் புலிகள்’ நாளை வெளிவருகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகாரபூர்வ ஏடான ‘விடுதலைப் புலிகள்’ ஏட்டின் குரல் 35-வது (டிசம்பர்-1992) இதழ் நாளை வெளிவருகின்றது.

நிறைவடையும் போராண்டு பற்றிய முழுமையான ஒரு மதிப்பீட்டை கொண்ட சிறப்பிதழாக இவ்விதழ் அமைந்திருக்கின்றது.

‘வெற்றிகளால் நிறைந்த 1992’ என்ற தலைப்பின் கீழ் அமைந்திருக்கும் போராண்டுச் சிறப்புப் பக்கங்களில் -

‘வெற்றியின் பாதையில்’ என்ற பகுதியில், இப் போராண்டில், சமர்முனையில் நிகழ்ந்த முக்கிய சாதனைகள் தொகுக்கப்பட்டுள்ளன’ மேலும், ‘புலிகளுக்குப் புகழ் மாலை’, ‘சிங்களப் படையின் போரிடும் உறுதி சரிவு’ ஆகிய தலைப்புகளிலான பகுதிகளும் இச்சிறப்பு இதழில் அடங்குகின்றன.

‘சிறிலங்கா அரசாங்கத்தின் அடுத்த நடவடிக்கை என்ன? என்ற முன்பக்கத் தலைப்புச் செய்தியுடன் வெளிவரும் இவ்விதழின் புலிகளின் குரல் பகுதியில், ‘மேற்குலக தாராளமும் தமிழர் தேசியப் பிரச்சினையும்’ என்ற தலைப்பிலான கருத்துரையும், போராளியின் குருதிச்சுவடுகள் பகுதியில் மேஜர் அபயனின் நினைவுக் கட்டுரையும் இடம் பெற்றுள்ளன. மேலும், ‘‘ஆமி வருகுது.,. நேவி வருகுது .... பொலிஸ் வருகுது ..... இனியென்ன வான்படை தானே’ என்ற தலைப்பிலான ஒரு கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

## கட்டுநிதி வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஆசிரியர்களுக்கான டிசம்பர் மாதச்சம்பளக் கட்டுநிதி யாழ் கல்வித் திணைக்களத்துக்கு நேற்றுக் கிடைக்கப் பெற்றுள்ளது நத்தார் வருடப்பிறப்புப் பண்டிகையை முன்னிட்டு ஆசிரியர்களுக்கான இம்மாதச் சம்பளம் டிசம்பர் 18 ஆம் திகதி வழங்கப்படுமென்று வடக்கு கிழக்கு மாகாணக் கல்விஅமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய அரசின் கொள்கை; எதிராக ஜெயலலிதா சபதம்

[சென்னை]

இந்திய மத்திய அரசின் பொருளாதார ஆதிக்க கொள்கையை எதிர்த்துப் போராடுவது எனவும் அண்ணாவின் இருமொழிக் கொள்கையை உறுதியுடன் பின்பற்றுவது எனவும் நேற்று எம். ஜி. ஆரின் சமாதிமுன் தமிழக முதல்வர் ஜெயலலிதா உட்பட அ தி மு. க. வினர் சபதம் எடுத்துக்கொண்டனர்.

எம் ஜி இராமச்சந்திரன் நினைவு தினமான நேற்று அவர்கள் இவ்வாறு சபதம் எடுத்துக் கொண்டனர்.

## துப்பாக்கியுடன் கைதி தப்பி ஓட்டம்

(கொழும்பு)

மாத்தறை மாவட்டத்தில் உள்ள வலஸ்முல்லை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் அப்பொலிஸ் நிலையத்தில் இருந்த துப்பாக்கி ஒன்றையும் எடுத்துக் கொண்டு தப்பியோடியுள்ளார்.

தப்பியோடிய இக்கைதியை பொலிஸார் துரத்திச் சென்று மீண்டும் கைது செய்துள்ளனர்.

இக்கைதி தப்பியோடுவதற்கு உடந்தையாக இருந்ததாகக்கூறப்படும் இப்பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த சுமார் ஐந்து பொலிஸார் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தீவகக் கோட்டத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட ‘‘மனிதனின் குருதியும் குருதி மாற்றீடும்’’ என்கின்ற தலைப்பிலான கருத்தரங்கு ஒன்று இன்று மாலை 3 00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கு ஆசிரியர் ந ஜெகநாதன் தலைமையில் நடைபெறும். இதில் சகலமாணவர்களையும் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பாடசாலை

யாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

இவரது கடத்தல் செய்திக்குப் பின்னர் இப்பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள் மிகுந்த அச்சத்துடன் வாழ்வதாகத் தெரிய வருகிறது.

## இளம் ஓவியர்

பொருளாதார கலாசார அடக்குமுறைகளுக்கு ஆளாகியிருக்கும் இன்றைய நிலையில் உங்களது அண்மைக்கால ஓவியங்களின் கருப்பொருள் என்ன?

★ போரின் விளைவுகள் பல்வேறு வகைகளில் எம்மைப் பாதிக்கத்தான் செய்கின்றன. அடக்குமுறையினால் எமக்கு ஏற்பட்ட அழுத்தங்களையும், துன்பங்களையும் உணர்த்தும் ஓவியங்களை மிகக்குறைவாகவே வரைந்துள்ளேன். அதற்காக நான் எனக்குள் சமரசம் செய்து கொண்டு குளங்களையும் கடலையும், பூந்தோட்டங்களையும், பறவைகளையும், மிருகங்களையும் கீறுகிறேன் என்று அர்த்தம் பண்ணிவிடக் கூடாது இராணுவத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளின் போது பெண்களுக்கு நேர்ந்த துரதிஷ்டங்களையும், காலாகாலமாக சமுதாயத்தின் பல நிலைகளிலும் பெண்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை உணர்த்தும் ஓவியங்களையும் சித்திரித்துள்ளேன்.

பெண்ணின விடுதலை பற்றிய உங்கள் கருத்து என்ன?

★ சமூகத்தின் மூடக்கொள்கைகளையும், அர்த்தமற்ற சட்ட திட்டங்களையும் அலட்சியப்படுத்திவிட்டு ஒரு பெண் விடுதலை அடைந்த பெண்ணாக வாழமுற்படும் போது, அந்தச் சமூகத்தின் தவறான விமர்சனங்களுக்கும், வக்கிரமான பார்வைகளுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது. பெண்கள் தம்மை இழிவுபடுத்தும் சக்திகளுக்கெதிராகவும், உரிமைகளுக்காகவும் போராடித்தான் ஆகவேண்டும்.

## புத்தூக்க வகுப்புகள்

விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பின் தீவகக் கோட்ட கல்வி வளர்ச்சிக் கழக ஆதரவில் ஆண்டு 6,7, 8,9,10,11 க்கான புத்தூக்க வகுப்புகள் யாழ். புனித மரியாள் கல்லூரியில் எதிர்வரும் திங்கள் மாலை 3 00 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. இவ் வகுப்புகள் திங்கள், புதன், வெள்ளி தினங்களில் மாலை 3.00 மணி தொடக்கம் 6 00 மணிவரை நடைபெறும்.

கிறிஸ்துவின்

தொடர்ந்து நடைபெறும் இராணுவத்தாக்குதல் மத்தியிலும் எப்போதும் பயந்து ஒதுங்க வேண்டியுள்ளது.

பாப்பரசர் இரண்டாம் அருள். சின்னப்பர் ஜனவரி முதல் நாளில் அனுசரிக்கப்படும் 26ஆவது உலக அமைதி தினத்துக்கான தமது செய்தியில், போரினால் எப் பிரச்சினையையும் தீர்க்கமுடியாது என்பதினையும், அமைதிக்குக் குந்தகமாக அமையும் வறுமையைப் போக்க நாம் முயற்சிக்கவேண்டும் என்பதனையும் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே நாமும் அமைதியை, சமாதானத்தை விரும்புகிறவர்களாகவும், வறுமை ஒழிப்பவர்களாகவும் மாறவேண்டும்.

‘‘அமைதிப் பாதையில் நம் காலடிகளைச் செலுத்த வானினின்று இளம் ஞாயிறு நம்பால் எழுந்துவரும்’’ அமைதியை விரும்புவோர் பலர். ஆனால் அதற்காக உழைக்க விரும்புவோர் ஒரு சிலரே. எனவே நாம் அமைதியின் கருவிகளாக மாற பகை உணர்வுகளையும் உள்ளங்களில் இருந்து அகற்றி உண்மையான சகோதரத்துவத்தை வளர்க்க மனித நேயத்தில் உயர நத்தார் புதுவருட விழா எம்மை அழைக்கிறது.

எல்லா மக்களும் இன்புற்றிருக்க இறைவன் சாந்தியும் சமாதானத்தையும் அருள இந்நத்தார் புதுவருடத்தில் இறைவனை வேண்டுகின்றேன்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

ஈச்சமோட்டை ஐக்கிய சன சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்று கிழமை பிற்பகல் மூன்று மணியவில் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும்படி அங்கத்தவர்கள் அனைவரையும் நிர்வாகத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யுத்தத்தின்

நிகழ்ச்சியைத் தயாரிக்கும்படி ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்துறக்கு ஜனாதிபதி பிரேமதாசா பணித்திருப்பதாகவும் தெரிவித்தார்.

சமஷ்டி

ஆயுதங்களும் இல்லை என்றும் அவை இருந்தால் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முடியும் என்றும் கூறுகிறார்கள் இராணுவத்தில் படித்த இளைஞர்கள் சேருவதில்லை இந்த யுத்தத்தை தொடர்ந்து நீடித்து சிங்கள இளைஞர்களை பலியிட முடியாது.

‘‘தமிழ் மக்கள் பல வழிகளிலும் ஏமாற்றப்பட்டமையே அவர்களை ஈழம் கேட்கும் நிலைக்குத் தள்ளியுள்ளது. அவர்கள் ஈழம் ஒன்றே பிரச்சினைக்கு தீர்வு என்ற முடிவில் இருக்கிறார்கள், உயிர்த்தியாகம் செய்து போராடுகிறார்கள்’’ என்றார்.


இன்னிசைப் பிரியர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

நத்தார் புதுவருட சிறப்பு நிழ்ச்சியாக
சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடாத்தும்
‘ராஜன்ஸ்’
இசைக் கலைஞர்கள் இணைந்து வழங்கும்

“இன்னிசை மழை”

வேம்படி மகளிர் உயர் கல்லூரி மண்டபம்
27 - 12 - 92 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி
[நிகழ்ச்சி நடைபெறுவதற்கு 2 தினங்கள் மட்டுமே உள்ளன]

நுழைவுச் சீட்டுக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் முன்கூட்டியே நுழைவுச் சீட்டுக்களைப் பெற்று உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்

ரிக்கற் கிடைக்குமிடங்கள் :
1. 233, அருச்சுனா வீதி, (ஸ்ரான்லி றோட்) யாழ்ப்பாணம்.
2. F(f) லாரீஸ் (சுண்டிக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில்]

அன்பளிப்பு :
தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்
ராதிகா நகை மாளிகை
222, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.
[3858]


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

24.12.92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 7215

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்;

28-1111, 41-8035, 41-8467, 41-2509.

வட பகுதிக்கு வெளியேசென்ற வாகன இலக்கங்கள்:

28-3306, 24-6154, 42-1019, 24-4384, 41-8068, 24-6639, 28-7978, 28-9259, 24-5509, 27-8155, 26-3998, 27-8125, 26-5563, 41-6544, 26-7525, 41-6686, 26-6197, 27-1637, 28-1020, 41-2659, 24-6053, 40-1079, 40-6979, 26-5967, 28-0364, 24-6293, 41-9454, 43-1019, 41-8292, 27-2034, 27-7711

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள ‘ஈழநாதம்’ பணிமனையில் 1992 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது